# தமிழ்க் கலை



இக் காட்சி இருக்குமா? ஏகுமா?

1-8-1947

விலை
அணா 4

# குறைந்த விலையில் பல ரகங்கள்

மதராஸிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள கூட்டுறவு சங்கக் கடைகளில் சரக்குகள் வெகு சீக்கிரம் விற்பனையாகின்றது. புதிது புதிதாய் அவ்வப்பொழுதுள்ள பாஷனுக்குத் தகுந்தபடி சரக்குகள் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிரமமுமில்லாமல் உங்கள் தேவைக்குச் சரியானவைகளை எங்களிடமிருக்கும் பலவித ரகங்களில் வாங்கிக்கொள்ளலாம்.

மதராஸ் கூட்டுறவு கைத்தறித் துணிகள் வாங்குவதில், நீண்டகால உழைப்பு, கடைசிவரை அழகு, சோபை, அன்றாட உபயோகத்தில் நன்மை இவைகளைத் தவிர நேராக உங்களுக்கு விற்கப்படுவதால், இதர வியாபாரிகள் லாபத்தைப் போக்கி, குறைந்த விலையில் கிடைப்பதை மறந்துவிடாதீர்கள்.

**கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான்**

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரிண்ட்ஸ், சிங்கம்ஸ், சில்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கை குட்டைகள். லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசு வலைகள், க்வில்ட்ஸ், தலையணைகள்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்
கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

## சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்

**6-A, உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.**

# வியாபாரிகளுக்கு ஓர் வாய்ப்பு!

கல் சிலேட்டுகள்

ஸ்டீல் சிலேட்டுகள்

தோற் பைகள்

மணி பர்சுகள்

பெங்கால் லெதர் சாமான்கள்

பென் ஓல்டர்கள்

விளையாட்டுச் சாமான்கள்

நாட்டுத் தலைவர் படங்
கொண்ட நல்ல பர்சுகள்

மற்றும் பல்வகை

ஸ்டேஷனரி சமான்கள்

மொத்தமாகவும்

சில்லரையாகவும்

கிடைக்கும்

## திருத்தாண்டவம்
## &
## கம்பெனி

55, பந்தர் தெரு,

சென்னை.


# தமிழ்க்கலை


(திங்கள் வெளியீடு)

ஆசிரியர் :

**அ. மு. பரமசிவானந்தம்**


*விரியும் அறிவு நிலை நாட்டுவீர் - அங்கு*
*வீழும் சிறுமைகளை ஒட்டுவீர்—பாரதி.*


**1 — 8 — '47**

**கலை - 5** ❋ **நூல் - 2**


## பொருளடக்கம்


| | |
|---|---|
| தமிழ்நாட்டில் தமிழ்மொழி | 2 |
| செயலில் வருமா ? | 5 |
| அடிகளார் பிரிவு | 8 |
| சிலம்புக் கதையின் காலம் | 9 |
| கலை விடுக்கும் கடிதம் | 14 |
| வேளாண்மை நிதி | 17 |
| பண்டைத் தமிழர் வழக்க வொழுக்கங்கள் | 22 |
| விடுதலையா ? | 28 |
| எது இசை ? | 34 |
| கண்ணே அஞ்சற்க ! | 37 |
| சமூகக் கட்டு | 40 |
| மீண்டும் போருக்கா ? | 45 |
| மதிப்புரை | 48 |



கலையில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள், கட்டுரையாளர் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியாகார்

# தமிழ் நாட்டில் தமிழ் மொழி !

உலக நாடுகள் அனைத்தும் தம்தம் வழியில் முன்னேறிக்கொண்டேவருகின்றன. எதிர் காலத்தில் ‘எம்முடைய நாடு எந்த நிலையில் வாழும்’ என்பதை ஆராய்ந்து அறிந்து அனைத்து நலத்தையும் ஆக்கும் வழியில் ஆர்வங்காட்டி உழைக்கின்றன. போர் இழைத்த தீமைகள் பல இருப்பினும் அடிமைநாடுகள் எழுச்சியுறுவதற்கு அப்போரே காரணமாயது என்று சொல்லலாம். விழித்த நாடுகள் பல. அவற்றுள் தலையாயது இந்திய உபகண்டம்.

அடிமை நீங்கி இந்திய கண்டத்தே சுதந்திர அரசுக்கு ஆவனவெல்லாம் வகுக்கத் தொடங்கி விட்டனர். இந்திய கண்டம் ஒரு இனத்தால், ஒரு மொழியால், ஒரு பண்பாட்டால், ஒரு கலையால் கட்டுப்பட்டதன்று. ஆகவே கலைவழி மொழிவழி, பண்பாட்டின் வழி விடுதலை பெற்ற இந்தியா பிரிக்கப் படுகிறது. கொடுக்கமாட்டோம் என்ற கொட்டு முரசு வீழ்ச்சியுற பாகிஸ்தான் பெற்றனர் முகமதியர்கள். அதைப் போன்றே வடநாட்டுப் பண்பாட்டிற்கு வேறுபட்ட தமிழ் நாட்டார் - தென்னாட்டார் தனிநாடு கேட்கின்றனர். அன்று பாகிஸ்தான் வேண்டாமென்று விதண்டாவாதம் பேசி இன்று அனைத்துக்கும் தலைதாழ்ந்தது போன்று, இன்று பெருந்தலைவர் முதல் சுதந்திரத் தமிழரசு வேண்டாமென்று பேசினாலும், அவர்களே இந்தப் பிரிவினையை ஆதரித்து ஆவன ஆற்ற முன்வரவேண்டிய காலம் அண்மையிலுள்ளது.

இன்று நாடு நாட்டுமக்களால் ஆக்கப்பட்டவரால் ஆளப்படுகின்றது. மொழிவாரியாக நாடுகள் பிரிக்கப்பட வேண்டும் என்று சென்னை அரசியல் மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி விட்டது. தமிழ்நாடு அத்தீர்மானத்தின்படி தனிநாடாகும். வேங்கடம் குமரி எல்லையிடையில் வீறுபெற விளங்கும் இந்தத் தமிழ் நாட்டில் இனி ஆங்கில மொழிக்கு முதலிடம் இல்லையென்ற உறுதிப்பாட்டினாலே தாய்மொழியாகிய தமிழுக்கு முதலிடம் தந்துள்ளனர் அரசியலார். வள்ளுவர் நாளைத் தமிழ்நாடு முழுதும் கொண்டாட ஆணை தந்த அரசியலாரை வாழ்த்துகின்றோம். தமிழ்நாட்டில் வாழ்வோருக்குத் தமிழே தாய் மொழி. ஆகவே அனைவரும் தமிழையே கட்டாயமாக

பயிலல் வேண்டும் என்று ஆக்கியிருப்பது தமிழன் வரவேற்க வேண்டுவதொன்று. அப்படியே தெலுங்கரும், மலையாளிகளும், கருநாடரும் தத்தம் நாட்டுமொழி முதன் மொழியாக ஆக்கப்படுவது குறித்து அகமகிழ்வர்.

இனி, தமிழ்நாட்டை ஆளப்போவது தமிழ்! அந்நிய மொழியன்று. ஆகவே - தமிழ்நாட்டில் அதன் தாய்மொழி முதல் மொழியாதலில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கக் காரணம் இல்லை. ஆங்கில நாட்டில் ஆங்கிலம் முதன் மொழியாக இல்லாது வேறுமொழியாகவும் இருக்கலாம் என்று ஒருவன் பேசுவானானால் அவனுக்கு இடம் அட்லாண்டிக் அடிபீடமாகும். அதேபோல் பிறநாடுகளிலும். ஆனால் தமிழ் நாட்டில் முதல் மொழியாகிய - தாய்மொழியாகிய - தமிழ் மொழியிடத்தில் மற்றொரு மொழியும் இருக்கவேண்டும் என்று ஒருசிலர் கூசாது கூறுவதைக் கேட்க வியப்பாக இருக்கின்றது!

சிலநாட்களாக ஒரு புது முயற்சி நடைபெற்றுவருவதை அறிய எந்த உண்மைத் தமிழனும் நல் உறக்கங் கொள்ளமாட்டான். தமிழுக்குப் பதிலாக வடமொழி இருக்கவேண்டும் என்று சிலர் கூப்பாடிட்டுப் பேசுகிறார்கள். எழுதவும் எழுதுகிறார்கள். அவர்கள்வாதம் விசித்திரம் - விந்தையுங்கூட! பிரஞ்சு முதலிய சிலமொழிகள் இருக்கும் போது இந்த வடமொழி மட்டும் ஏன் இருக்கலாகாது என்று வாதிக்கின்றன. யாருக்கு பிரஞ்சும் பிறமொழிகளும் என்பதை அவர்கள் உணர வேண்டும். தமிழ் நாட்டிலே தாய்மொழி தமிழ் என்று கொள்ளாத ஆங்கிலோஇந்தியருக்கும் அவர்போன்றோருக்கும் அம்மொழிகள் அளிக்கப் பட்டிருக்கின்றனவேயன்றி, தமிழ் நாட்டில் நெடுங்காலம் வாழ்ந்து, தமிழன் எனப்பேசிக் கொண்டு, தாய்மொழி தமிழ் என்றே சொல்லிக் கொள்ளும் மகனுக்கல்ல மகளுக்கல்ல பிறமொழி! இந்த நிலையறியாது தமிழில் பேசிக்கொண்டே - தமிழில் வாழ்வு நடத்திக் கொண்டே பிறமொழியும் இங்கு இடம் பெறல் வேண்டும் என்று பேசுவாரானால் அவர்களைத் தமிழ்நாட்டுக்கு உட்பகை என்றுதான் கூறவேண்டும்,

உண்மையை அவர்கள் மறையாது ஒத்துக்கொள்ளட்டும். எங்களுக்குத் தமிழ் மொழி தேவை இல்லை, நாங்கள் தமிழ் இனத்துக்கும் புறம்பானவர்கள் என்று. இல்லையேல் தமிழ் மொழிக்கு முதலிடம் தருவதை வரவேற்றுத் தமிழரோடு தமிழராய் வாழ வகை அறிந்து கொள்ளட்டும்.

அரசியலாருக்கு **விடுக்கும்** பணிவான வேண்டுகோள் இது. உலக சரிதத்தைக் கண்டு அறிந்த அவர்கள் இதுபற்றி ஆய்ந்து செய்த முடிவினை மாற்ற வேண்டாமென்று கேட்க இருந்தோம். தமிழிடத்தை பிற மொழிக்குக் கொடுப்ப தாகச் சிறிதும் சிந்தை செய்யாது, தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கு முதலிடம் தான் என்பதை முற்றும் வலியுறுத்து வார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் பர்ஷியன், அரபி மொழிகளோடு வடமொழிக்கும் அரசியலார் இடமளித்தனர். இது எதிர்பாரத ஒன்று. அரபிமொழிகளோடு வடமொழி யும் முதலிடம் பெறுமானால் அரசியலிலும், பிறவற்றிலும் தமிழ்நாட்டில் அரபுமொழி பயில்வோர் பெறும் இடத்தை இவர்களும் பெறுதல் முறை. அரசாங்கம் அதையும் செய்து முடிக்க வேண்டும்.

வடமொழி பயில வேண்டும் என்ற ஆர்வம், அன்பு, பற்று உண்மையில் சிலருக்கு இருக்குமானால், அவர்களுக்கும் அரசி யலார் வழி கோலலாம். ஆங்கிலத்திற்குக் கொடுக்கும் இடத்தை வடமொழி பெறட்டுமே. அன்றி கணக்கு, அறிவியல், பொருள் நூல், வரலாற்றுநூல் ஆகியவற்றுள் ஒன்றற்குப் பதிலாக வடமொழி விரும்புபவர்கள் அம்மொழியைப் பயிலட்டுமே. என்றும் தமிழுக்குப் போட்டியாடத்தான் அவர்கள் அறிந்தார் கள் என்றால் அதை இனி விட்டுவிடுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆங்கிலம் முதல் மொழியாக இருந்தகாலத் தெல்லாம் கைகட்டி வாய்புதைத்து நின்று, தாய்மொழிக்கு முதலிடம் தரும் காலத்து அந்தத்தாய் மொழி வாழும் நிலத் திலே - அந்த நாட்டு மக்கள் உழைப்பிலே வாழ்ந்து வரும் சிலருக்கு ஆத்திரம் வருவானேன். வேண்டுமானால் அவர்கள் வேறு பாடத்திற்குப் பதில் வடமொழி பயிலட்டுமே! வர வேற்கின்றோம்! ஒரு நாட்டில் அந்நாட்டு மக்களின் தாய் மொழிக்கு முதலிடமே அன்றிப் பிறமொழிகளுக்கு என்று பேசுவதே சரிதம் காணாத ஒன்று! காலம் காணாத ஒன்று! வடமொழிமீது வெறுப்புக் கொண்டோ அன்றி வட மொழியைப் பயிலவேண்டும் என்பார்மீது சீற்றம் கொண்டோ எழுந்த எழுத்தல்ல இது! வரலாறு காணாத ஒன்றை-வழக்கில் வாழாத ஒன்றை - நாகரீக நாடுகள் நாடாத ஒன்றை இந் நாட்டில் காட்ட முயல்வது தவறு என்று கூறுகின்றோம்! தமிழ் நாட்டில் வாழவேண்டுவது தமிழ்! முதலிடம் தமிழுக்கு! இதையே வற்புறுத்துகிறோம் மீண்டும் மீண்டும்! அரசியலார் கருத்திருத்தி ஆவன செய்வாராக!

# செயலில் வருமா?

தமிழர் வாழ்வில் நலம் கண்டவர்கள், எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் இனிய உளம் படைத்தவர்கள். தாம்பெற்ற இன்பத்தை உலகம் பெற வேண்டும் என்று விழைந்தவர்கள். மக்களினத்தில் வேறுபாடு காட்டாவகையில் வாழ வழிவகுத்தவர்கள். அனைவரும் உடன்பிறப்பாளர்கள், அனைவரும் இன்பத்தில்வாழ வேண்டியவர்கள், யாது ஊரே யாவரும் கேளிர் என்பனபோன்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள் உடையவர்கள். இவர்தம் உயர்ந்த குறிக்கோளெல்லாம் வாழ்விடை வழக்கத்தில் இருப்பன. அந்த வழக்க ஒழுக்கக்கமே சம யத்தின் அடிப்படையாகி, சமயம் தோன்றலாயிற்று.

இன்று நாட்டில் பல சமயங்கள் உள்ளன. அனைத்தும் ஒரே அடிப்படையின்மேல் கட்டப்பட்டவைகள். 'அன்பின் வழியது உயிர் நிலை' என்பதே அவ்வடிப்படை. சமயத்தைத் தோற்றிவைத்தவர்க ளெல்லாம் இந்த அடிப்படையின் மேலேயே தத்தம் சமயத்தை வாழ வைக்க முயன்றார்கள். வாழவைத்தார்கள். சமயம் என்பது மக்கள் வாழ்வொடு இயைந்ததொன்று எனக் காட்டினார்கள். வாழ்வு வேறு சமயம் வேறு என்ற கருத்தில் அவர்கள் அன்று வாழ்ந்ததில்லை. வாழ் வுக்கு வழிவகுப்பதே சமயம் என்றார்கள்? அன்று சமயம் வாழ்ந்தது!

சுமார் 1,500 ஆண்டுகளுக்கு மேலாகச் சமயத்தில் மாசு உண்டா யிற்று. யாதொரு வேறுபாடும் காணாவகையிலே வாழ்ந்த சமயத்தே அனைத்து வேறுபாடுகளும் தலைவிரித்தாடின. ஆடுகின்றன இன்றும். சமயத்தின்பேரால் சொல்ல முடியாத கொடுமைகள் - கொள்ளைகள் - கொலைகள்கூட நடந்திருக்கின்றன - நடக்கின்றன. இந்த நிலையில் சம யம் வாழுமா என்ற ஐயம் அனைவர் உள்ளத்திலும் பிறக்கின்றது. இத் தகைய வேறுபாடுகள் கற்பித்துவாழும் சமயம் இருப்பதிலும் இறப் பதே மேல் என்று எண்ணினர். பேசுகின்றனர். அதை உண்மை யென்று கொள்ளவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

கோயில்களோ, மடங்களோ, பிற சமயச் சொத்துக்களோ ஒரு தனிப்பட்டவருடைய உரிமைகளாக இன்று விளங்குகின்றன. உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் எண்ணற்ற மக்கள் ஒருசமயத்தே ஏங் கும்போது அதே சமயத்தைச் சார்ந்தார் கோயிலுக்குள் குபேர வாழ்வு வாழ வழியுள்ளது. அனைவருக்கும் பொது என்ற கடவுள்தன்மை மாறி, தொடக்கூடியவர் சிலர், பார்க்கக்கூடியவர் சிலர், பார்க்கவும் கூடா தவர் சிலர் என்ற வேறுபாடு கற்பித்துக்கொண்டது. அனைவருக்கும் பயன்பட வேண்டியபொருள் அண்டி வாழ்வோர்க்கும் - பிற போலி களுக்கும் ஆடம்பர வாழ்வு வாழப் பயன்படுகிறது. இந்த நிலையில் இருந்தால் சமயம் வாழுமா? வாழத்தான் ஏழை உள்ளம் எண்ணுமா?

'தமிழ்நாடு சிறக்க வேண்டுமானால், உழைப்பவர் சமாதானத்தோடு வாழ வேண்டுமானால், சாதி வித்தியாசம் தொலைய வேண்டுமானால்,

கட்டுப்பட்ட கடவுள் தன்மை நீங்கவேண்டுமானால், கலையும் இலக்கியமும் விளங்க வேண்டுமானால், நாட்டில்வாழும் ஒவ்வொருவரும், கல்வி, உணவு, இருக்கை, வைத்தியவசதி ஆகியவற்றைப் பெறவேண்டுமானால் அனைத்துக்கு மேலாக நாத்திகம் நாட்டில் இல்லை என்று செய்ய வேண்டுமானால், கோயில்களும், மடங்களும், அற நிலையங்களும் தத்தமது உண்மைப் பணியினை ஆற்ற முன்வரவேண்டும். அவை ஏழைகளுக்காகவே உள்ளன என்பதை ஓர்ந்து அவர்கள் துயரில் கைகொடுத்து, கல்வியில் கருத்திருத்தி, வாழ்வின் வழி அமைத்து அவர்தம் அன்பினைப்பெற ஆவன செய்யவேண்டும்.' இது 5-7-47ல் சென்னை முதலமைச்சர் அற நிலையங்களைப் பராமரிப்போர் இடையில் பேசிய பேச்சு. கருத்து வரவேற்கத் தக்கதே. ஆனால் இது ஏட்டளவிலே - மேடையளவிலே - கூட்ட அளவிலே கழியுமானால் அதைப்பற்றி ஒவ்வொரு உண்மைத் தமிழனும் எண்ணாதிருப்பதே மேல். அமைச்சர் அனுப்பிய பத்துவித நலம் நிறைந்த வேண்டுகோள் ஒவ்வொருவர் உள்ளத்தும் பதியுமானால் அன்று சமயம் வாழும்! அன்றேல் ?

வாழ்வுக்குச் சமயம் அவசியமா என்ற கேள்வி இன்று பலரிடை எழுகின்றது. அனைவருக்கும் உடைமையாக்கப்பட வேண்டிய பொருள் ஒரு சிலரிடம், அதுவும் சாதிப்பற்றும் பிற வேறுபாடுகளும் கொண்ட ஒரு சிலரிடம் சிக்கிக்கிடப்பதால்தான் இந்தக் கேள்வி எழுகின்றது என்பதை முதலமைச்சர் பேச்சு நன்கு எடுத்துக்காட்டுகின்றது. தானே பூவும் நீரும் கொண்டு இறைவனை நீராட்டி இன்புற்ற சிறப்பை அப்பர் பாடுகின்றார். ஆனால், அவர் வழிவந்தவர் என்று பெருமை பேசிக் கொள்ளும் பக்தர்கள் கோயில் உள்வாயிலில் செல்லலாகாது. இப்படி மக்களினத்தில் வேறுபாடு! மடங்களோ சொல்ல வேண்டுவதில்லை. தம் இனத்தவர் என்று கொண்டுள்ள ஒரு சிலரைத்தவிர மற்றவரோடு உண்ணுவதில்லை என்று பேசும் துறவிகள் இருப்பது நாட்டுக்கு நலிவு தரும் நோயல்லாது வேறுயாது? 'சாதி பேதமும் மாதர் போகமும் விட்டவன் ஞானி' என்பது அன்றைய மொழி. இன்றைய மடங்களில்?

ஆகவே மடங்கள் சீர்திருத்தமுற வேண்டும். கோயில்கள் நல்வழிப் படுத்தப்பட வேண்டும் என்பது உறுதி! அதற்கென அறநிலையப் பாதுகாப்புக் கழகம் அமைக்கப் பட்டுள்ளது. அது இருப்பதினும் இல்லாதிருப்பதே மேல் என்று சிலசமயங்களில் தோன்றுகிறது. அறநிலைய அலுவலாளர்கள் அனைத்து ஊரையும் சுற்றிப் பார்த்தறியாதவர்கள். பலகிராமங்கள் அவர்கள் பார்வையில் படாதவை. அந்தந்த ஊர்களுக்குத் தேவையை அவர்கள் அறியாதவர்கள். அறிந்தவர் போய்ச் சொன்னாலும் செவி கொடுக்காது வாளாக்கிடப்பவர்கள். ஒரு கோயிலுக்கு வேண்டிய தேவையை எழுதினால் அது கவனிக்க ஆண்டுகளும் ஆகின்றன. திவான்பகதூர் K. S. இராமசாமி ஐயங்கார் அவர்கள் சொல்லியபடி அறநிலயப் பாதுகாப்பு கழகத்தார்

அந்தந்த ஊர்மக்கள் சொல்வதையும் சற்று கவனிக்க வேண்டும். அமைச்சர் அந்தவகையில் அவர்களை ஆக்குவார்கள் என்று நம்புகின்றோம்!

நாட்டில் நாத்திகம் பரவினதற்குக் காரணம் கோயில்கள் சீர் கெட்டமைதான் என்றார் முதலமைச்சர். இதை மறுக்க யாரும் முன் வரமாட்டார்கள் என்பது உறுதி! வாழ்வுக் கென்று அமைக்கப்பட்ட கோயில்கள் வியாபாரத் தலங்களாகின்றன. கோயில்களில் அமைக்கப் படும் உணவுகள் ஏன் ஏழைகளுக்குப் பயன்படுத்தலாகாது என்று கேட் கின்றார் பிரதமர்? ஆக்கலாம் அவரே மனம் வைத்தால் விரைந்து செய்யலாம். சிதம்பரத்தில் ஆறுகாலத்திற்கு ஆகும் உணவினை, படிப் போருக்கு அளித்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல ஏழைமாண வர்களுக்கு இடமளிக்குமே. படிக்கவருபவன் பட்டினியால் வாடிவருந்த, பக்கத்தே பஜனை படத்தில் பலகாரங்கள் மிகுந்திருந்தால் அத்தகைய சமயம் வீழ்ந்தால்தான் என்ன?

சமயத்தை வளர்ப்போர் கடமைகள் யாவை? பிரதமரின் பத்து கொள்கைகளை அவர்கள் பின்பற்றுவார்களா? கோயில் சொத்தும், மடத்துச் சொத்தும் அனைவர்களும் உரியனவாக்கப் பெறுமா? கோயில் இடங்கள் கல்வி வளர்ச்சிக்கு இடமாக்கப் பெறுமா? ஏழை எளியவர் களுக்கு உணவும் உடையும் உறையுளும் கொடுத்து அவர்தம் வளர்ச்சி யில் - கலையில் - கல்வியில் கருத் திருத்துமா சமயம்? 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதை ஏட்டில் வைக்குமா? அன்றி நாட்டில் வைக்குமா சமயம்?

ஆக்க வேண்டுவன இன்னும் பல! இந்த அறநிலையச் சொத்துக் கள் பொதுக் கல்விக்குப் பயன்படலாகாது என்பார் ஒருசாரார். நாம் சொல்வது நாட்டுக்கு நலன் தரும் எதற்கும் இப்பொருள் பயன்பட வேண்டும் என்பது! தமிழ் நாட்டுக் கல்வி வளம் பெற்றது நாட்டுச் சம யம் என்று வீறு பேசும் சைவ வைணவத்தாலல்ல! கிறிஸ்து சமயத்தால்- அவர்தம் பொருளால் - அவர்தம் பணியால். அந்தப் பொருளால் அவர் கள் கல்வி வளர்த்தார்கள். அவர்தம் சமயம் வளர்ந்தது. அது அவர் தம் சமயவளர்ச்சிக்குச் சாதகமாயிற்று. ஆனால் சைவவைணவர் தத்தம் கல்வி என்றே பிரித்துப் பிரித்துப் பார்ப்பார்களாயின் இன்னும் சமய வளர்ச்சி குன்றும் என்பது உறுதி! ஐயாயிரம் கல் தாண்டிப் பணம் கொணர்ந்து, உல்லாச உப்பரிகை வாழ்வைவிட்டு ஏழையொடு ஏழை யாகக் கிறிஸ்தவப் பாதிரியார் வாழ்ந்த நிலையில் அவர் சமயம் இங்கு கால் கொண்டது. சமயம் என்று ஏட்டில் எழுதி, உல்லாச உப்பரிகை வாழ்வு வாழ்ந்து - என் சாதி உயர்ந்தது, உன்சாதி தாழ்ந்தது என்று பேசி, ஏழைகளை ஏசி, அவரை ஏறெடுத்து பார்க்கவும் கூசி அகங்கார வாழ்வு வாழ்ந்ததால் இங்கு சமயம் தாழ்ந்தது! அத்தாழ்ச்சி நீங்க வேண்டுமானால் பிரதமர் கூறிய அனைத்தும் செயலில் வரவேண்டும். ஏட்டில் எழுதிய காலம் - மேடையில் பேசியகாலம் - கண்மூடி மௌனி யாகிய காலம் - உல்லாச வாழ்வு வாய்ந்த காலம் - பிறரைப் பாராத

காலம் கழிய வேண்டும். அந்தோ! இதை நினைத்தாலும் உயிர் போகும் சிலருக்கு! வயிறு வலிக்கும் சிலருக்கு? வாட்டம் வரும் சிலருக்கு! ஆனால் காலம் அவர்களுக்காகக் காத்து நிற்காது! இப்போதே விரைந்து வந்து அனைத்து கோயில்களும் மடங்களும் தம் தம் சொத்தை - உரிமையைப் பொதுமக்களுக்கு என வழங்கவேண்டும். இல்லையேல் காலம் அதை விரைந்து செய்து முடிக்கும். அப்போது இவர்தம் அடிச்சுவடும் இல்லாது அழிந்தொழியும்.

பிரதமருக்கு இறுதியாக விடுக்கும் வேண்டுகோள் இது! அவர் தம் அரும் முயற்சி இவ்வழியில் திரும்பி இருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் இம்முயற்சி இம்மட்டோடு நின்றால் பயனில்லை. எல்லாக்கோயில் களும், மடங்களும், அறச்சாலைகளும் அனைவருக்கும் பொது என்றும், அவற்றின் பொருளெல்லாம் அனைவருக்கும் பயன் படும் என்றும் திட்டம் செய்யும் வரையில் - மறுத்தால் சட்டம் செய்யும் வரையில் அவர் ஓய்வுகொள்ளலாகாது என வற்புறுத்துகின்றோம்! நாடு வாழவேண்டுமானால் அதுவேவழி! பெரும்பொருள் அங்கே முடங்கிக் கிடக்க - ஒரு சிலருக்கு உதவ, மற்றவர் வாடப் பார்த்திருத்தல் எந்த அரசாங்கத்திற்கும் ஏற்ற தல்ல! இதை அறிவார் அமைச்சர்! ஆவன செய்வார் என்று எதிர்பார்க்கின்றோம்! இத்துறையில் அவர்தம் செயல சிறப்பதாக!

---

## அடிகளார் பிரிவு?

யாழ்ப்பாணத்தே தோற்றி - மயில்வாகனனாக வளர்ந்து, இராமகிருஷ்ண மடத்து அறப் பெருந்துறவியாகி - விபுலானந்தராக விளங்கி, தமிழ் நாட்டுக்கும் - மொழிக்கும் - கலைக்கும் - யாழுக்கும் தன் காலத்தை யெல்லாம் செலவிட்ட பெரியார் - குணமென்னும் குன்றேறி நின்ற அறிவு சால் அறிஞர் - அடிகளார் இப்புவி வாழ்வை நீத்தசெய்தி தமிழர் உள்ளத்தைத் தொட்டது! சுட்டது! தமிழ் நாட்டுக்குப் பழம் பெருஞ் செல்வமாகிய யாழை இன்று கண்காணக் காட்டிய பெருந்தகையாரின் பிரிவை எண்ணாத தமிழர் மண்ணவர்!

தூய துறவொழுக்கமும், திண்ணிய உடல் நலமும், அறிவறிந்த தமிழ் உள்ளமும், அன்பு கலந்த நெஞ்சும் ஒருங்கே அமைந்த அடிகளார் தமிழ் நாட்டுக்குப் புரிந்த பணிகள் பல! அவர்தம் அருமுயற்சியால் மறைந்த யாழ் உருப்பெற்றது. பெற்ற யாழைத் தமிழர் போற்றத் தொடங்கு முன்னே அடிகளார் நம்மை விட்டு அகன்ற நிலை எண்ணி இரங்கத்தக்க தன்றோ! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே சில ஆண்டுகள் ஆற்றிய அறப்பணியோடு கலந்த - அன்புத் தமிழ்ப் பணியை அவரிடம் பயின்ற பலரும் அறிவர் - அன்றித் தமிழ் நாடறியும் - தமிழர் அறிவர்.

கடல்கடந்த சிங்கள நாட்டிலிருந்த போதிலும் அவர் உள்ளம் தமிழ் உள்ளமாக - தமிழர்வளம் கருதும் உள்ளமாக அமைந்ததை அனைவரும் அறிவர். அடிகளார் வாழ்ந்ததெல்லாம் தமிழுக்காக - தமிழர்க்காக - தமிழ் மண்ணுக்காக! ஆம் அத்தகைய அடிகளார் மறைந்தார். அவர்தம் அரும்பணி தமிழ் நாட்டில் சிறப்பதாக! தமிழர் தலைநகராகிய சென்னையில் அவர்தம் சிலை அமைக்க தமிழ்மக்கள் வழிகோலுவாராயின் அவர்கள் அடிகளாருக்கு நன்றி காட்டியவராவர். தமிழ் நாட்டு மக்கள் அடிகளார் நினைவுக்கு ஆவன செய்ய வேண்டுமென அழைக்கின்றோம்! தமிழர் ஒன்றுபடுக! உற்றது ஆற்றுக!

# சிலம்புக் கதையின் காலம்

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B.A., B.L.

தமிழ் நாட்டார் போற்றும் ஐம்பெருங் காவியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். பழந்தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் சான்றாக நிற்பது சிலப்பதிகாரம். கற்பின் செல்வியாகிய கண்ணகியின் பெருமையும், பாண்டிய அரசாட்சியின் சிறப்பும், சேரநாட்டரசனது வீரமும், அக்காவியத்திலே விளங்கக் காணலாம்.

இத்தகைய சிலப்பதிகாரம் எப்பொழுது தமிழ்நாட்டில் எழுந்தது? அதைப்பாடிய இளங்கோவடிகள் எப்பொழுது தமிழ் நாட்டில் வாழ்ந்தார்? அவருடன் பிறந்த சேரன் செங்குட்டுவன் எப்பொழுது அரசு வீற்றிருந்தான்? இவற்றைச் சிறிது பார்ப்போம்.

சிலப்பதிகாரத்தைப் பொது நோக்காகப் பார்க்கும் பொழுது தமிழ்நாடு சிறந்த நிலையில் இருந்த காலமே சிலப்பதிகாரக் காலம் என்று தோற்றுகின்றது. சேர, சோழ, பாண்டியர்கள் தமிழ்நாட்டை யாண்ட காலம் அது. இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் செழித்து வளர்ந்த காலம் அது. கடல் வழியாக நிகழ்ந்த வர்த்தகத்தால் தமிழ் நாட்டில் செல்வம் பெருகிய காலம் அது.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் சிறந்த துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. காவேரியாறு கடலோடு கலக்குமிடத்தில் செல்வச் செழுமையும் அழகும் வாய்ந்ததாய் விளங்கிற்று அந்நகரம். பட்டினம் என்னும் சொல் சிறப்பு வகையில் காவிரிப்பூம் பட்டினத்தையே குறிப்பதாயிற்று. இக்காலத்தில் பட்டணம் என்பது சென்னப்பட்டணத்தைக் குறிப்பது போன்று, அக்காலத்தில் பட்டினம் என்னும் பெயர் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வழங்கிற்று. அதன் அழகையும் அமைப்பையும் கண்டு மகிழ்ந்த கவிகள் பூம்புகார் நகரம் என்று அழைத்தார்கள். "பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்" என்று பட்டினத்தைப் பாடினர் சிலப்பதிகார ஆசிரியர்.

அந்நகரின் துறைமுகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நடந்தது. தமிழ் நாட்டாரோடு வர்த்தகம் செய்து வளம்பெற்ற யவனர் என்ற கிரீக்கர்கள் — கிரீஸ் தேசத்தவர்கள் — காவிரிப்பூம் பட்டினத்தின் கடற்கரையில் விண்ணளாவிய மாடங்கள் கட்டி வசித்தார்கள். தெய்வ மணமும் அந்நகரில் கமழ்ந்து கொண்டிருந்தது. சிவன்கோயில், முருகன் கோயில், பெருமாள் கோயில், வாசவன் கோயில் இன்னும் பல கோயில்கள் அங்கு நின்று அணி செய்தன. அவற்றைச் சிலப்பதிகாரம் அழகுபெற அடுக்கிக் கூறுகின்றது.

---

* இக்கட்டுரை சென்னை வானொலி நிலையத்தார் உத்தரவு பெற்று வெளியிடப்பெற்றது.

" பிறவா யாக்கை பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் "

என்று பாடிச் செல்கின்றது சிலப்பதிகாரம். இந்திரத் திருநாள் கோலாகலமாக இருபத்தெட்டு நாள் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் பொருள் வளமும், தெய்வ நலமும் பெற்றுக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கிய காலமே சிலப்பதிகாரக் காலம்.

இத்தன்மை வாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்தாள் கண்ணகி. தன்குலத்துக்கும் நலத்துக்கும் பொருத்தமான கோவலனை மணந்தாள் ; அவனோடு சில காலம் வாழ்ந்தாள். மாதவி என்னும் பொது மாதின் மையலிலே தாழ்ந்தான் கோவலன். பொருளை எல்லாம் தொலைத்தான். அந்நிலையில் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றார்கள். அங்கு கணவனைப் பறிகொடுத்தாள் கண்ணகி. குற்றம் ஒன்றும் செய்யாத கணவனுக்குத் தவறிழைத்த பாண்டியனையும், தீமை நிறைந்த மதுரையையும் தன் கற்பின் ஆற்றலால் அழித்தாள் கண்ணகி. அப்பால் கணவனை இழந்த துயரத்தோடு சேரநாட்டுக்குச் சென்றார். அங்கே கற்பின் பெருமையால் தெய்வீகம் அடைந்தாள். ஆகவே கண்ணகியின் கதை மூன்று தமிழ் நாட்டுக்கும் உரியதாயிற்று. அவள் பிறந்து வளர்ந்தது சோழநாடு; கற்பின் திறத்தைக் காட்டிய நாடு பாண்டி நாடு; தெய்வீகமுற்ற நாடு சேர நாடு.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டவன் ஒரு சிறந்த மன்னன். செங்குட்டுவன் என்பது அவன் பெயர். கற்புத் தெய்வமாகிய கண்ணகி தன் நாட்டில் வந்து விண்ணுலக மடைந்தாள் என்று அறிந்த செங்குட்டுவன் அவளுக்குத் தலைநகரத்தில் ஒரு கோயில் கட்டினான். இமயமலையிலிருந்து சிலை எடுத்துவந்து, கண்ணகியின் திருவுருவம் செய்து அக்கோயிலில் நிறுவினான். அத்திருவிழாவைக் காண அயல்நாட்டு அரசர் சிலரை அழைத்திருந்தான்.

" அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறை கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவவேந்தனும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் "

அங்கு வந்திருந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இக்காட்சிகளை எல்லாம் கண் களிப்பக் கண்டார் சேரன் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ ; அவர் செந்தமிழ்ச் செல்வர் ; இளவரசுப் பதவியை உதறியெறிந்து, முனிவராயிருந்து தவம் புரிந்தவர். அவர் அரச குலத்திற் பிறந்த பெருமையும், துறவு பூண்டு ஆற்றிய தவத்தின் அருமையும் தோன்ற இளங்கோ அடிகள் என்று தமிழுலகம் பாராட்டுவதாயிற்று. சிலப்பதிகாரம் பாடியவர் அவரே. இளங்கோ

அடிகள் இயற்றிய காவியத்தை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று போற்றினர் பாரதியார்.

> "சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்
> தெய்வவள்ளுவன் வான்மறை கண்டதும்
> பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
> பாரளித்ததும் தருமம் வளர்த்ததும்
> ..................................
> அன்ன யாவும் அறிந்திலர் பாரதர்
> ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்"

என்று பரிந்து பாடிய பாட்டில் சேரன் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகளைப் போற்றுகின்றார் பாரதியார்.

இத்தகைய சிலப்பதிகாரத்தின் காலத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் சேரன் செங்குட்டுவன் காலத்தை ஆராய்ந்து அறிதல் வேண்டும். வீரனாகிய அச்சேரனைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள். அவர்களுள் பரணர் என்பவர் ஒருவர். தமிழ் நாட்டில் சங்கப் புலவர்கள் என்று பாராட்டப்படுகின்ற புலவர்களுள் பரணருக்கும் கபிலருக்கும் ஒரு தனிப் பெருமை யுண்டு. 'பொய்யறியாக் கபிலரொடு பரணர் ஆதிப் புலவோர்' என்ற வரிசையில் வைத்து புகழப்படுகின்ற பரணர் சேரன் செங்குட்டுவனைப் பற்றிப் பாடிய பாடல்களுள் பதினொன்று நமக்குக் கிடைத்துள்ளன. பரணரது புலமையையும் சீலத்தையும் பெரிதும் மதித்த சேரன் சிறந்த சன்மானம் அளித்ததோடு தன் மகனையும் அவரிடம் மாணாக்கனாக ஒப்புவித்தான் என்று பண்டை நூல்களால் தெரிகின்றது. எனவே சங்கப் புலவர்களாகிய பரணர் முதலிய சான்றோர் வாழ்ந்த காலமே செங்குட்டுவன் காலமாகும்.

அக்காலத்தை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குச் சிலப்பதிகாரமே ஒரு சிறந்த சான்று தருகின்றது. கண்ணகியின் திருவிழாவிற்கு சேரன் செங்குட்டுவன் அனுப்பிய அழைப்புக் கிணங்கி வஞ்சிமா நகரில் வந்திருந்து, பத்தினிக் கடவுளை வணங்கிய மன்னருள் ஒருவன் 'கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' என்பதை முன்னமே கண்டோம். இலங்கை யரசனாகிய கயவாகுவின் காலத்தைத் தெரிந்து கொண்டால் செங்குட்டுவன் காலமும் விளங்கிவிடுமன்றோ? இந்த வகையில் சரித்திர ஆசிரியர்களாகிய கனகசபைப் பிள்ளை முதலிய அறிஞர்கள் ஆராய்ந்திருக்கின்றார்கள். இலங்கை யரசர் வரலாற்றைக் கூறும் மகா வம்சம் என்ற நூலில் கஜபாகு என்னும் பெயருடைய மன்னர் இருவர் குறிக்கப்படுகின்றார்கள். முதல் கஜபாகு கிருஸ்து பிறந்த நூற்றுஎழுபத்தோராம் ஆண்டு பட்டம் எய்தி, நூற்றுத்தொண்ணூற்றுமூன்று வரை அதாவது இருபத்திரண்டு வருடம் அரசாண்டவன். அவன் காலத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு மற்றொரு கஜபாகு அரசு புரிந்தான். இவ்விரண்டு அரசர்களில் முதல் கஜபாகுவே செங்குட்டுவன் காலத்தவனாதல் வேண்டும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கொள்கை. எனவே செங்குட்டுவன் அரசாண்ட

காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது தெளிவாகின்றது. அதுவே சிலப்பதிகாரத்தின் காலமுமாகும்.

இக்கொள்கைக்கு இன்னும் ஆதாரமான செய்திகளிற் சிலவற்றை சிறிது பார்ப்போம். சோழநாடு கரிகாற் சோழன் என்னும் திருமாவளவன் காலத்திற்குப் பின்பு உள் நாட்டுக் குழப்பத்தால் உலைவுற்றுச் சீரழிந்தது. அரசுரிமைப் போர் மூண்டது. புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு சோழன் அரியாசனம் ஏறினான். உறையூர் என்னும் உள்நாட்டுத் தலைநகரில் மற்றொரு சோழன் அரசனாயினான். புகார்ச் சோழனுக்கும் உறையூர்ச் சோழனுக்கும் போர் தொடங்கிற்று. அப்போரின் தொல்லை ஒருவாறு தீர்ந்தபின்னர், பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்னும் பழமொழிப்படி, சோழநாட்டிற்கு ஒரு பெருந் தீங்கு நேர்ந்தது. கருங்கடல் கரைபுரண்டு எழுந்து காவிரிப்பூம் பட்டினத்தை அழித்தது. சோழ மன்னன் புத்திர சோகத்தால், இந்திரனுக்குரிய திருவிழாவை நடத்தத் தவறினான் என்றும், அதனால் சீற்றம்கொண்ட கடல் தெய்வம் அந்நகரத்தை அழித்துவிட்டதென்றும் மணிமேகலைக் காவியம் கூறுகின்றது. இக்கொடுமை நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழமன்னன் காலத்தில் நிகழ்ந்தது. அப்போது அந்த நகரில் இருந்த மாடங்கள், கோயில்கள், கோட்டங்கள், எல்லாம் அழிந்தொழிந்தன. அரண்மனையை இழந்த அரசன் அந்நகரினின்றும் வெளியேறிய செய்தியை இரக்கத்தோடு கூறுகின்றார் மணிமேகலையாசிரியர்.

“ விரிதிரை வந்து வியனகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன் ”

என்னும் மணிமேகலை வாசகத்தில் சோகம் நிறைந்திருக்கின்றது, துன்பம் வந்துற்றபோது துணையாவர் யாருமின்றித் தன்னந்தனியனாய் அந்நகரினின்றும் போயினான் மன்னர் மன்னன், என்பது அவ்வடிகளின் கருத்து.

இவ்வாறு அழிந்ததாக மணிமேகலையிற் சொல்லப்படுகின்ற காவிரிப்பூம்பட்டினத்தை ஏழாவது நூற்றாண்டில் எழுந்த தேவாரப் பாசுரத்தில் ஒரு சிற்றூராகக் காண்கின்றோம். சிலப்பதிகாரத்திற்கும் தேவாரத்திற்கும் இடைப்பட்ட ஐந்நூறு ஆண்டுகளில் சோழ மன்னர் தம் நிலையில் தாழ்ந்தனர். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாளத் தலைப்பட்ட பல்லவர்கள் சோழ நாட்டைப் பிடித்துக் கொண்டார்கள். பழம் பெருமையெல்லாம் இழந்து நின்ற காவிரிப்பூம் பட்டினத்தில் அன்புகொண்டு ஒரு பல்லவன் அங்கு சிவாலயம் கட்டினான். அதற்குப் பல்லவனீச்சரம் என்று பெயரிட்டான். ஈச்சரம் என்பது ஈசன் கோவில். பல்லவன் கட்டிய ஈச்சரம் ஆகலின் அது பல்லவனீச்சரம் என்று பெயர் பெற்றது. தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர் காலத்தில் பல்லவனீச்சரமே அவ்வூரிற் காட்சி யளித்தது. “பட்டினத்துறை பல்லவனீச்சரம்” என்றும் அக்கோவிலைப் பாடினார் திருஞானசம்பந்தர். எனவே காவிரிப்பூம்பட்டினம் சோழர் ஆட்சியில்

சிறப்புற்று விளங்கிய காலம் சிலப்பதிகாரக் காலம். அது பதங்குலைந்து பல்லவர் ஆட்சியில் அமைந்தகாலம் தேவாரகாலம் என்பது தெளிவாகின்றது.

தமிழ்நாட்டில் பல்லவர் எப்போது அரசாண்டார்கள்? மூன்றும் நூற்றாண்டுமுதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை என்று சரித்திர ஆசிரியர் கூறுவர். சிவனடியார்கள் பாடிய தேவாரத்திலும், திருமாலடியார்களாகிய ஆழ்வார்களது திருப்பாசுரத்திலும் பல்லவர் குறிக்கப்படுகின்றனர். ஆனால் சிலப்பதிகாரத்தில் அவரைப் பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை. ஆதலால் சிலப்பதிகாரம் எழுந்த காலம் பல்லவர் ஆட்சிக்கு முற்பட்ட காலம் என்று கொள்ளத்தகும்.

தமிழ் நாட்டுக்குப் பேரும், புகழும், பெருவாழ்வும் தந்த வீர மன்னர் காலத்திலேதான் சிலப்பதிகாரம் பிறந்தது. விண்ணளாவி நிற்கும் இமயமலையில் சோழநாட்டுப் புலிக்கொடியை ஏற்றினான் கரிகால் சோழன். சேரநாட்டு அரசனாகிய நெடுஞ்சேரலாதன் தென் குமரி முதல் வட இமயம்வரை ஒருமொழிவைத்து உலகாண்ட சேரலாதன் என்று குறிக்கப்படுகின்றான். அவன் ஆணை இமயமலையளவும் சென்றமையால் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் என்று தமிழ் நாட்டில் வழங்கப் பெற்றான். அவன் மகனே சேரன் செங்குட்டுவன். தந்தையின் புகழைத் தானும்பெற ஆசைப்பட்டு வடநாட்டின்மீது படையெடுத்தான். தமிழரசரைப் பழித்துப் பேசிய வடநாட்டரசரைப் போர்க்களத்திலே வாட்டிவென்றான்; இருவரைச் சிறை பிடித்தான், தன்னாட்டிற்குக் கொண்டுவந்தான். கண்ணகி தெய்வத்திற்குச் சேரன் திருவிழா எடுத்தபோது அவ்விருவரும் உடனிருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இங்ஙனம் தமிழ் நாட்டாரின் வீரப்புகழ் வடநாட்டிற் பரவியிருந்த காலம்; தமிழ்நாடு வர்த்தகத்தால் எத்திசையும் புகழ் பெற்று ஓங்கி நின்றகாலம்; தமிழ்ப் புலவர் பல்லாயிரவர் தமிழ்த் தாய்க்குப் பலவகையான கவிதைக் கலன்களை அணிந்து கோலம்செய்து கொண்டிருந்த காலம் அது. அக்காலமே சிலப்பதிகாரத்தின் காலம்.


# கௌசல்யா கிரைப் மிக்சர்

இது, குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, அஜீர்ணம், குடல் கோளாறு, மாந்தம் முதலியவை உண்டாகாமல் தடுத்து, நல்ல ஜீர்ண சக்தியைத் தந்து, குழந்தைகளைப் பாதுகாப்பதில் சிறந்த ஔஷதம்!

இம்மருந்து ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது நல்லது.

**கௌசல்யா பர்மசி லிமிடெட்**

P. O. Box 88, மதராஸ்

# தில்லி நோக்கிய திருமுகம்!

தில்லியில் கூடி இருக்கும் அரசியல் அமைப்புக் கழகத்தின் தமிழ் நாட்டு உறுப்பினர்களே!


திசை நோக்கி வணக்குகின்றேன். அடிமைவாழ்வில் பிறக்கும் முதல் தேதி இனி கிடையாது. அடுத்துவரும் முதல் தேதி உரிமை இந்தியாவின் முதல் தேதியாக இருக்கும் என்பதை எண்ண மகிழ்ச்சி மிகுகின்றது. அடுத்தகலை உரிமை இந்தியாவின் கலையாக மலரும். இந்தியா விடுதலை பெற்றுவிட்டது என்பதை ஒவ்வொரு இந்தியனும் வரவேற்பான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதே வேளையில் ஒவ்வொரு தமிழனும் அங்கு வடக்கிருக்கும் உங்களை நோக்கிச் சில சொல் ஆசைப்படுவான் என்பது மட்டும் உறுதி!

வரும் கால இந்தியாவை ஆளும் முறையினை அறுதியிட நீங்கள் அங்குகூடி இருக்கிறீர்கள்! அரசியல் அமைப்புகள் உங்களைக்கொண்டே உறுதி செய்யப்படும். இமயந் தொடங்கிக் குமரிவரையில் உள்ள பல நாட்டு உறுப்பினர்கள் உங்கள் சபையில் இடம்பெற்றுள்ளார்கள். அவர்களுள் நீங்கள் ஒரு சிறு கூறு எனினும், எங்களுக்கு - நம் தமிழ்நாட்டுக்குத் தாங்கள் தற்போது தலையாக விளங்குகின்றீர்கள். தமிழ் நாட்டில் வருங்காலத் தலை எழுத்து உங்கள் கையில்தான். நாட்டில் அல்லலும் அவதியும் வந்தால் தமிழ்மக்கள் வசவுக்கு நீங்கள் தயாராக வேண்டும். அதே சமயத்தில் இன்பமும் எழிலும் அமைந்தால் வீட்டிற்கு ஒரு மாலை உங்கட்கு உண்டு. இரண்டும் உங்கள் செயலைப் பொறுத்து இருக்கிறது.

தமிழ் நாட்டு எல்லையைப்பற்றி எல்லாக் கட்சியினருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. பல ஆயிர ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட எல்லையை நல்ல காலமாகத் தமிழ்நாட்டுத் தலைவர் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். வேங்கடம் குமரியிடைப் பட்ட தமிழ்நாடு காண அனைவரும் விரும்புகின்றனர். உங்களில் சிலரும் கூட அதைப்பற்றத் திட்டமாகக் கூறி இருக்கிறீர்கள். ஆனால் அதன் முடிவினை அங்கு டில்லியில் அமர்ந்திருக்கும் நீங்கள்தான் காண வேண்டும். எல்லை கமிஷன்கள் ஏற்படுத்தப் படுகின்றன. அவற்றுள் உண்மையும் நேர்மையும் உடையவர்கள் பங்கு பெறுகிறார்களா என்பதைக் காணுதல் உங்கள் பொறுப்பு. தமிழ் நாட்டைத் துண்டுபோட உங்கள் சபையில் ஒருவேளை பேச்சு வந்தாலும்

அதை வெட்டி வீழ்த்துவது உங்கள் கடன். இதுவரையில் பாகிஸ்தான் வேண்டாம் வேண்டாம் என்று விண்முட்டும் வரையில் பேசி, இன்று அவர்கள் வேண்டியதெல்லாம் வலியக் கொடுத்து விட்டு நிற்பதுபோல், மேடைகளிலெல்லாம். தமிழ் நாட்டு எல்லையை விளக்கிச் செயலில் வரும்போது தெலுங்கரும் மலையாளரும் இருபுறமும் துண்டாட நினைக்கும் செயலுக்கு உறுதுணையாவீர்களோ என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணுகின்றான். உங்கள் செயல் அவர்கள் சந்தேகத்தைப் போக்கவேண்டும். தமிழ் நாட்டு எல்லையை ஒரு அங்குலம் குறைப்பதா யிருந்தாலும் கூட அந்த அரசியல் நிர்ணய சபையில் உங்களுக்கு வேலை இல்லை என்பதை நீங்கள் நன்கு உணரவேண்டும். உங்கள் தலைவர்களை உணரச்செய்ய வேண்டும். அவர்கள் பேச்சு அதை நன்கு விளக்கிக்காட்ட வேண்டும். எம் வேண்டுகோள் இது. அரசியலை நிர்ணயிப்பதோடு எல்லையைத் திட்டமாக நிர்ணயம் செய்யுங்கள். சென்னை தங்களுடையது என்று வாய் கூசாது கூறும் ஆந்திரர்கள் செயலெல்லாம் சிந்தை செய்யுங்கள். பெற்றால் தமிழ் நாடு வேங்கடம் குமரி இடைப்பட்ட நிலையில் அமையவேண்டும். அந்த அமைப்பினை உங்கள் சபை ஆக்கித் தரட்டும். இல்லையேல் அங்கு வேண்டாம். இங்கு வாருங்கள்; அனைவரும் ஒன்று சேரலாம். உரியதைப் பெறலாம்!


இந்தியாவின்
இணையற்ற
தயாரிப்பு!




ஜாப்கோ
- பவுன்டிங் -

ஜய பாரதம் கோ
மதராஸ் - பெங்களூர் - எர்ணாகுளம்

மற்றொன்றும் இங்கே நினைவூட்டலாம் எனக் கருதுகின்றேன். தங்கள் சபையிலே இந்திய யூனியனுடைய பொது மொழியாக இந்துஸ்தானி இருக்கப்போவதாக முடிவு கட்டியுள்ளீர்கள். அப்போது தமிழ்நாட்டில்-நீங்கள் விரும்பும்படி அது இந்திய யூனியனில் சேர்ந்தால் இந்துஸ்தானி கட்டாயம் படித்துத்தான் ஆகவேண்டுமா? படிப்பது ஒரு புறம் இருக்கட்டும். இந்தி படித்தவர்களுக்குத்தான் இந்திய அரசாங்கம், தமிழ் அரசாங்கம் இரண்டித்தும் வேலை கிடைக்குமா? இது எல்லாம் சற்று விளக்கமாகத் தெரிவியுங்கள். ஒன்று மட்டும் தற்போது நிச்சய மாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் தமிழ் முதல் மொழியாக இருக்க வேண்டும் என்று பேச்சுகள் நடக்கும்போதே இந்தி எல்லாப் பாடசாலை களிலும் கட்டாயமாக்கப்பட்டது. ஆகவே தமிழ்நாட்டு அலுவலகங்களில் கூட ஒருவேளை வேலைக்கு மனுப்போட்டால் இந்தி இருந்தால் நல்லது என்று முடிவு கட்டுவீர்களோ என்று கலங்குகிறார்கள் தமிழ் மக்கள். தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குக் கொடுக்க இருக்கும் இடத்திற்கு உலைவைக்கின்ற ஓர் உட்பகை கிளம்புகின்ற இந்த நாளில், இந்தியும் அவசியம் என்று பேசுவீர்களானால் நீங்கள் எந்த நாட்டின் சார்பாக அர சியல் நிர்ணய சபைக்குச் சென்றீர்களோ, எந்தநாட்டு மண்ணைக்கொண்டு வாழ்க்கை நடத்தினீர்களோ, எந்தநாட்டுச் சோறு, பால், பிற உங்கள் உடலங்களை – உயிர்களை ஓம்பிவளர்த்தனவோ அந்த நாட்டை மறந்தவர் ஆவீர்கள்! மறைத்தவரும் ஆவீர்கள். ஆகவே இந்தி எங்கேயாவது வாழட்டும்! நமக்குக் கவலை இல்லை. இந்தத் தமிழ்நாட்டில் அதற்கு முத லிடம் என்றோ, அது படித்தால்தான் வேலை என்றோ என்று மட்டும் திட்டம் செய்து விடாதீர்கள். உங்கள் சபையிலேயே தமிழில் பேசினால் சிரிப்பு! இந்தி தெரியாதவர்கள் எல்லாம் இதில் இருக்கவேண்டாம் என்ற பேச்சு. தமிழர் என்றால் அவமதிப்பு. இத்தனையும் சகித்துக்கொண்டு நீங்கள் அங்கு இருக்கிறீர்கள் என்றால் அது தமிழ்நாட்டின் மட்டற்ற பொறுமையைத் தான் விளக்குகின்றது. முடிவாக உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். தமிழ்நாட்டைத் துண்டு போட ஒருக்காலும் ஒத்துக் கொள்ள வேண்டாம். தமிழ் நாட்டில் பிறமொழிகளுக்கு முன்னிடமோ, முதலிடமோ தருதல்வேண்டாம். தமிழ்நாட்டு அரசியலை, கவர்னர் முதல் கடைசி ஆள்வரை ஆக்கும் பொறுப்பைத் தமிழர்தான் மேற்கொள்ள வேண்டும். தமிழ்மொழி தமிழ் நாட்டை ஆளவேண்டும். இதற்கெல்லாம் அரசியல் நிர்ணய சபையில் ஆக்கம் தேடுதல் உங்கள் பொறுப்பு. தேடித் தெளிந்து ஆவன செய்யுங்கள். உங்களைத் தமிழ்நாடு என்னும் மறவா வழியில் நாட்டு அரசியலை முடிவுகட்டுங்கள். அப்போதுதான் உங்கள் செயல் சிறக்கும்! செய்துவிட்டு வாருங்கள். செய்ய முடியவில்லையானால் சபையை உதறித் தள்ளி ஒன்றுபட ஓடி வாருங்கள்.

உங்கள் அன்புள்ள 'கலை'.

# வேளாண்மை நிதி

இராவ் பகதூர் - டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடு,
M.A., Ph.D., B.Com., Bar.-at-Law.

சில மக்களிடம் தேவைக்கு அதிகமாகப் பணம் இருக்கிறது. இவர்கள் அனுவசியச் செலவு செய்யாமல் உபரிப் பணத்தைச் சேமித்து வைப்பார்கள். இச் சேமிப்புத் தாபனத்தையே நிதி (Bank) என்கிறோம். இவ்வாறு மீதப்படும் பணத்தைத் திரட்டிப் பொருளாதார முன்னேற்றத்தில் பணமுடையுடையோர்க்குக் கடன் கொடுப்பது நிதிகளின் நல்ல சேவையாகும். பலபடப் பொருளை வாங்கி வாழ்க்கையில் அளவுக்கு மிஞ்சிச் சுகங்களை யனுபவிப்பதற்குப் பதிலாக, வீண்செலவு செய்யாமல் பணத்தை நிதியில் சேமித்து வைக்க, முடையுடையோர்க்கு நிதிகள் கடன் கொடுக்கவும் ஏதுவாயிருத்தலினால், சேமிப்பாளருக்குப் பதிலுக்கு வட்டி தரப்படுகிறது. உபரிப் பணம் உடையோர்க்கும், பணம் வேண்டுவோர்க்கும் நிதி நடுவில் நின்று, வாணிப வளர்ச்சி, பொருட் பெருக்கம் ஆகிய துறைகளில் நற்பணியாற்றுகிறது.

கிராமங்களில் கடன் கொடுத்தலும் கடன் வாங்குதலும் வேளாண்மைத் தொழிலின் வருவாயைப் பொருத்திருக்கிறது. மக்களின் அடிப்படையான தேவைகளுக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத மூலப் பொருள்களுக்கும் வேளாண்மை வேண்டற்பாலதாக இருந்தும் இது வாணிபத்துறையில் முன்னேற்ற மடையவில்லை. மற்றைய பொருள்களின் விலையைக் காட்டிலும் வேளாண் - விளைபொருளின் விலை கத்தரித்தேயிருப்பது கண்கூடு. பருவப் பலன்களின் முரண்பாட்டினால் விவசாயத்தின் பொருளாதார நிலைமை அடிக்கடி மாறுகிறது. தானியங்களின் விலை இறங்கும்போது சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய சொற்ப லாபமும் அடிபட்டுப் போகிறது. விலை இறங்கிய காரணம் பற்றியே விற்பனை அதிகமாவதில்லை. மக்கள் உண்ணும் அளவு விலையின் ஏற்றத் தாழ்வுக்குத் தகுந்தாற்போல் சுருங்குவதும் பெருகுவதுமில்லை ; கடனாகக் கொடுத்தாலுங்கூடத் தேவைக்குமேல் எவரும் உணவுப் பொருளை வாங்கமாட்டார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளினால் வேளாண்மையில் கடன் கொடுத்தல் வாங்குதலாகிய முறைகளைச் செம்மையாக அமைப்பது எளிதாக இல்லை.

நம்நாட்டில் தனித்தனியாக அமைந்த விளைநிலம் அனேகமாக மிகச் சிறு அளவினதாகவே இருக்கிறது. வேளாண்மைக்குச் செய்யப்படும் செலவு, அரசாங்கத்துக்குச் செலுத்தப்படும் நிலவரி ஆகியவை போக

இலாபம் ஒன்றும் கிட்டுவதில்லை. விவசாயிகள் பெரும்பாலும் சொந்தத்துக்குப் பயிர் செய்வோரும், குத்தகை அல்லது வாரத்திற்கு உழுவோருமாக இருக்கிறார்கள். பெரும் ஈடு இல்லாமையால் வேளாண்மைக் கடன் சில சமயங்களில் மூழ்கிப் போவதும் உண்டு. தற்போதைய விவசாயத்தில் இலாபம் நிச்சயமில்லை. எனவே வேளாண்மை செய்வோருக்கு எளிதில் கடன் கிடைப்பதில்லை.

விவசாயிகளின் மீளாக் கடனால் அவர்களுக்குப் பணவசதி செய்து தருவதே கடினமாகி விடுகிறது. இந்தியாவில் வேளாண்மைக் கடன் 1929-ல் 900 கோடி ரூபாயாக இருந்தது. பின்னர் விலை மலிவால் இது 1200 கோடியாகப் பெருகிற்று. வருமான உயர்வுக்குப் புறம்பான முறையில் கடன் வாங்கிய தொகையெல்லாம் செலவு செய்யப்படுவதால் வேளாண்மைப் பிரசினை மேலும் சீர்கேடடைந்து விடுகிறது. விவசாயிகளின் நன்மையைக் கருதி விரைந்தளித்த கடன் நிவாரணம், கடன் சமரசம் ஆகிய சட்ட திட்டங்களால்கூடப் பயனேற்படவில்லை.

இப்பொழுது இருக்கக்கூடிய கடனைத் தீர்ப்பதற்கும், சொற்ப காலக் கடன், நீண்டகாலக் கடன், (இவ்விரண்டினையும் ஒப்புநோக்க) மத்திய காலக்கடன் ஆயவற்றிற்கு ஏற்பாடு செய்யவும் விவசாயிகளுக்குக் கடனளிக்கும் அமைப்பு இன்றியமையாதது. கொடுக்கல் வாங்கலில் கண்டிப்பாக இருந்துகொண்டு மக்களின் மனப்பான்மையையும் பண்படுத்தும் முறையில் இவ்வமைப்புகள் தொண்டாற்ற வேண்டும். தவிர, விவசாயிக்கு அளிக்கப்படும் கடன், விளை நிலத்தை வளம் படுத்தவும் வேளாண்மையை விருத்தி செய்யவுமே உபயோகிக்கப் படுகிறதா என்றும் கண் காணித்துக் கொள்ளவேண்டும்.

தற்போது நம்நாட்டில் வேளாண்மைக்கடன் முறை செம்மையாக இல்லை. வெவ்வேறு வட்டி திட்டத்தில் கடன் வாங்கப்படுகிறது.

ஈடு இல்லாமலே 9 முதல் 18 சதவீத வட்டிக்குத் தனிப்பட்ட மக்களால் கடன் தரப்படுகிறது. அவர்கள் போக்கே அவர்கள் விருப்பமாகையால் இலாவாதேவியில் சட்டதிட்ட நுணுக்கங்கள் இல்லை; எனவே, விவசாயிகள் அவர்களிடமே வலிந்து போகிறார்கள். இவர்கள் பழையமுறை நிதிகளிலும் உண்டியலை ஈடுகாட்டிக் கூட்டு முதல் நிதிகளிலும் பணம் வாங்கித் தம் கிராமத்தாருக்குக் கடன் கொடுக்கிறார்கள்.

விளைபொருளைக் களத்தினின்று அங்காடிக்கு எடுத்துச் செல்லத் தனிப்பட்டவர்கள் அல்லது பழையமுறை நிதியாளர் பணம் தருகிறார்கள். இத்தகையோருள் வடநாட்டு மார்வாரிகள், முதலாளிகள், ஸிந்திகள், கள்ளிடைக் குறிச்சி நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், தென்னிந்தியப் பிராமணர்கள் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் உள்நாட்டு உண்டியலைத் தள்ளியெடுத்தும் வாக்குறுதிப் பத்திரத்தின் மேலும், அறுவடை ஈட்டின் பேரிலும் கடன் தருகிறார்கள்.

வேளாண்மையினருக்கு 1884-ம் வருடத்திய விளை நில வளர்ச்சிக் கடன் சட்டம், விவசாயக் கடன் சட்டம் ஆகியவற்றின்கீழ் அரசாங்கம் கடன் தருகிறது. இதற்குத் 'தக்கவிக்' கடன் என்று பெயர். முதல் சட்டத்தின்படித் தரப்படும் கடன் தொகையைக் கொண்டு நிலத்தை நிரந்தரமாக வளம்படுத்தலாம். விவசாயக் கடன் சட்டத்தின் கீழ் வாங்கும் தொகையில் மாடு, எரு, விதை முதலியன வாங்கலாம் ; இது மிகக் குறைந்த வட்டிக்குத் தரப்படும். இது குறைந்த கால அல்லது இடைக்காலக் கடன். மேற்கூறிய இருவகைக் கடனும் விரைவில் வாங்க முடிவதில்லை ; வாங்கினாலும் தரப்படும் தொகை குறைவு அது வசூலிக்கப்படும் முறை அதிக நிர்ப்பந்தமானது.

மாசூலையே ஈடாக வைத்துக்கொண்டு வாணிபநிதிகள் (Commercial Bank) தானியங்களை வியாபாரத் தலங்களுக்கு எடுத்துச் சென்று விற்பதற்குச் சொற்ப காலக் கடன் தருகின்றன. ஆனால் இத்தகைய லாவாதேவி மிகச் சுருங்கிய அளவிலேயே நடைபெறுகிறது. விற்பனை முறையும் செம்மைப்பட்டு, விளை பொருள்களின் விலையும் உயருமானால் வாணிப நிதிகளில் இன்னும் பலர் கடன் வாங்கிப் பயனடைய ஏது வாகும். தென்னிந்தியாவில் மட்டுமே கிளை நிதிகள் பயிரிடுவோரோடு நேரான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கடன் முறையைப் பெருக்கியும் திருத்தியும் அமைக்க 1904-ம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் முறை துவக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தில் கடன் முறையே சிறப்பியல்பாகக் காணப்படுகிறது. ஆறாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் 1,42,512 கூட்டுறவுச் சங்கங்களில் 1,04,084 வேளாண்மைக் கடன் சங்கங்களாக இருந்தன. ஜெர்மன் கூட்டுறவாளர் ரெய்பிஸன் அவர்களின் முறையைத் தழுவி இச்சங்கங்களின் அங்கத்தினரது பொறுப்பு வரையறுக்கப்படாததாயிருக்கிறது ; ஒருவர் கடனுக்கு மற்றவர் யாவரும் கூட்டுப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்கள் ; சங்கத்தோர் தமக்குள் சிலரையே பஞ்சாயத்தாராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். இவ்வளவு செய்தும் கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில் இன்னும் திருப்திகரமாகப் பரவவில்லை. இன்னும், சில கிராமத்தார் கூட்டுறவு முறையை அரசாங்கத்தாரால் புகுத்தப்படும் வெளிநாட்டு இயக்கம் என்றே எண்ணுகிறார்கள். பொறுப்பு வரையறுக்கப்படாத வரையில் இச்சங்கங்கள் முன்னேற்றமடைய மாட்டா. அநேக சங்கங்களில் நிர்வாகிகளே விவசாயத்தின் பேரால் வேறு செலவுக்குக் கடன் வாங்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட கடனாளிகளால் கூட்டுறவு அமைப்புகளுக்கு மூலதனம் சேருவது கடினம். கிராமத்தார் தம் சேமிப்பை இச் சங்கங்களில் விடுமுதல் (Deposit) செய்வதில்லை. வாணிப நிதிகளும் பெரும் பணக்காரர்களும் கூட்டுறவு சங்க நிதிக்கு நீண்டகாலக் கடனாகப் பணம் தருவதில்லை. ஆகவே உயர்ந்த நோக்கங்களுடையவையாயினும் இச்சிறு நிதிகளில் பணம் கிடையாது. தக்க பிணைப்பொருளின் (Surety) மேல் சிறிது

உயர்ந்த வட்டிக்கே கூட்டுறவு மத்திய சங்கம் கடன் கொடுக்கிறது ; இது தவிர கிராமத்துக் கிளைச் சங்கங்களுக்குப் பணத்திற்கு வழியில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த வட்டியில், மூழ்கி விடாத முறையில் சொற்ப காலத்திற்கும் மத்திம காலத்திற்கும் கடன் தருவன. குறிப்பிட்ட காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட வட்டிக்குத் திருப்பித் தருவதாகப் பத்திரத்தின் மேல் கடன் வாங்கி (Debenture) அதை விவசாயிகளுக்கு நிலத்தின்மேல் நீண்டகாலக் கடனாக நில அடைமான நிதிகள் தருகின்றன. இவை கூட்டுறவு முறையிலோ, கூட்டுறவும் வாணிபமும் தொடர்புடைய முறையிலோ நடத்தப்படுகின்றன. கடன் நிவாரண சேவைக்கு இந்நிதிகள் பெரிதும் பயன்படுகின்றன. சமரச முறையில் தள்ளியதுபோக நிர்ணயிக்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பித்தருதற்கு நில அடைமான நிதி உதவுகிறது. விவசாய இலாகாவுடன் ஒத்துழைத்து, நிலத்தை வளம் படுத்தக் குறைந்த வட்டிக்குக் கடன் தாராவிட்டால் கூட்டுறவு முறையைத் தழுவி நிலவும் நிதிகள் தம் கடமையைச் சரிவரச் செய்தவையாகா. தற்போது நில அடைமான நிதிகள் கடன் தருவதில் காலதாமதம் செய்கின்றன ; வட்டி விகிதம் உயர்வாக இருக்கிறது ; பிணைப்பொருளும் அதிகமாகக் கேட்கப்படுகிறது. இவற்றால் விவசாயிகளுக்கு நலக்குறைவு ஏற்படுகிறது. கடன் பத்திரத்திற்கு (Debenture bonds) வட்டி யதிகம். நில அடைமான நிதியின் பெரும்பாலான மூலதனம் கடன் பத்திரத்தின் மூலமாகத் திரட்டப்படுகிறது ; எனவே, விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் வட்டி இன்னும் அதிகமாகவே இருக்கிறது. இக்குறையை நீக்க அரசாங்கம் இந்நிதிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் தரவேண்டும்.

கிராமங்களில் வேளாண்மையினருக்குக் கடன் தருவது மட்டுமல்லாமல் அவரிடையே சேமிப்பு உணர்ச்சியை வலுப்பெறச் செய்து சேமிப்பு நிதிகளையும் நிறுவவேண்டும். இச்சேம நிதிகளிலிருந்து விவசாய வளர்ச்சிக்குக் கடன் தருவது நல்லமுறை. நம் நாட்டில், சேமிப்பு முறை இன்னும் நன்கு வேரூன்றவில்லை. கடன் தரு திட்டமும் முறையாக வகுக்கப்படவில்லை. சேமிப்பிலிருந்தே கடன் தரும் நாடுகளில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுகிறது. டென்மார்க்கில் விவசாயிகளின் சேமிப்பிலிருந்துதான் விவசாயிகளுக்குக் கடனும் தரப்படுகிறது ; 1937-ல் நீண்டகாலக் கடனில் மூன்றிலொரு பங்கு சேம நிதிகளிலிருந்தே தரப்பட்டதாம். பிரான்சு தேசத்திலும் இந்நிதிகள் வேளாண்மைக் கடன் முறைக்குப் பெரிதும் உதவியாயிருக்கின்றன.

நம் நாட்டில் அரசாங்கத்து வைப்பு நிதி (Reserve bank) யின் வேளாண்மைக் கடன் இலாகாவாலுங்கூடக் கடன் முறையை முற்றிலும் ஒழுங்கு படுத்த முடியவில்லை. இது மாகாணக் கூட்டுறவு நிதிகளுக்குத் தக்க உத்தரவாதத்தின் பேரில் முன்பணமும் கடனும்

கொடுக்கலாம். இதனால் ஏற்படும் நன்மை கூட்டுறவு இயக்கத்திற்குத் தான். எவ்வாறாயினும் அறுவடையின்போது மாசூலைக் களத்தினின்று விற்பனைத் தலத்திற்கு எடுத்துச் செல்லவும் பணமில்லாமல் இன்னலுறும் விவசாயிகளுக்கு ஈடுபெற்றுக்கொண்டு, கிளைச் சங்கங்கள் மூலம் மத்திய சங்கம் கடன் தருவதற்கு வசதியேற்படும். இக்கடன் கிளைச் சங்கங்கள் மூலம் இலகுவிலும் காலந் தாழ்த்தலின்றியும் குறைந்த வட்டிக்கே தரப்படவேண்டும். இந்நோக்கத்தோடு, பொன் வைப்பு நிதியின் வேளாண்மைக் கடன் இலாகாவும், மாகாணக் கூட்டுறவு நிதியும், கிராமக் கூட்டுறவு நிதிகளும் ஒத்துழைத்தால் விவசாயிகளுக்கு எவ்வளவோ சேவை செய்யலாம். இத்துறையில் இதுவரை பயன்தரு முயற்சி எதுவும் செய்யப்படவில்லை.

விவசாய முன்னேற்றத்திற்கு இனி பெரு முயற்சிகள் செய்யப்படவேண்டும். பல்வேறு கடன் அமைப்புகளையும் தன்னுள் அடக்கியதாய், முறையாகப் பணியாற்றுவதாய் இந்திய வேளாண்மை நிதியென வொன்று நிறுவுதல் வேண்டும். வைப்பு நிதி இதற்கு வேண்டிய மூலதனத்தைத் தந்துதவ வேண்டும். விவசாயிகளிடமிருந்து சேமிப்பு நிதி திரட்டுவதிலும் அவர்களுக்குத் தேவையான கடன் கொடுப்பதிலும் வைப்புநிதி இன்னும் அதிக அக்கரை காட்டவேண்டும். தொழில் வளர்ச்சிக்கும் வாணிப வளர்ச்சிக்கும் கடன் முறை எவ்வளவு அவசியமோ அவ்வளவு இன்றியமையாதது வேளாண்மைத் துறையிலும் கடன் முறை. புதியநிலங்களைச் சாகுபடி செய்வதற்கும், பழைய வயல்களை வளப்படுத்துவதற்கும் இந்திய வேளாண்மை நிதி சொற்பகாலக் கடனும் மற்ற முன்னேற்றத்திற்கு நீண்டகாலக் கடனும் தரவேண்டும். இப்படித் திட்டம்பெற்ற தீவிர முயற்சியாலேயே ' அதிகம் பயிர்செய் ' (Grow more Food) இயக்கம் வெற்றி பெறும். அப்பொழுதுதான் நம் மாகாணம் உணவுக்கு வெளி நாடுகளையோ மற்ற மாகாணங்களையோ நாடவேண்டாத நிலை ஏற்படும். இலகுவான கடன் முறைக்குக் குறைந்த வட்டி விகிதம் அடிப்படை. இதற்கு எப்படியும் விகிதத்தை $4\frac{1}{2}$ சதவீதமென நிர்ணயிக்க வேண்டும். தற்போது நிதிகள் $2\frac{1}{2}$ சதவீதம் கூடன் வாங்கி $6\frac{1}{4}\%$ சதவீதம் கடன் தருகின்றன ; இதனால் நிதிகளுக்கு 150% சதவீதம் இலாபம் கிடைக்கிறது.

விவசாய சீரமைப்புக்குத் தக்க சமயம் இதுவேயாகும். கூட்டுறவுச் சங்கங்கள் கடன் தருவனவாக மட்டும் இல்லாமல் சேமிப்பு, கிராம முன்னேற்றம், பால் விநியோகம், கோழிப்பண்ணை முதலியவற்றையெல்லாம் கூட்டுறவு முறையில் நிறைவேற்றி வைக்கக்கூடிய சகல சேவைச் சங்கங்களாகவும் (Multi-purpose Societies) மாற வேண்டும். அங்கத்தினரின் பொறுப்பு (liability) வரையறுக்கப்பட்டதாய் இருத்தலே நல்லது. அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய உதவி செய்ய விரும்புகிறது. தானியங்களின் விலையேற்றம் காரணமாக வேளாண்மையினரும் உற்சாக முடையவர்களாகவே காணப்

# பண்டைத் தமிழர் வழக்கவொழுக்கங்கள்

(மொ. அ. துரை அரங்கனார்)

## 2. மங்கல அணி அல்லது தாலி அணிதல்

நல்லாவூர் கிழார் நமக்கு வழங்கிய சொல் லோவியத்தில், திருமண விழாக் காட்சிகளைக் கண்டு இன்புறற்றோம். பெருஞ்சோறு, தண்பெரும் பந்தர், ஆறுகளிலிருந்து கொண்டுவந்து பரப்பிய மணல், விளக்குகள், மாலைகள், திங்கள் உரோகிணியோடு கூடிநிற்கும் நன்னாள், உச்சிக் குடத்து மகளிர் நீர் கொண்டுவருதல், முதுசெம்பெண்டிர் அந்த நீர் கொண்டு மணமக்களை முழுக்காட்டுதல், பிள்ளை பெற்றுத் தேமல் படர்ந்த வயிறுடைய வாலிழை மகளிர் நால்வர், மணமகளை வாழ்த்து தல், 'கற்பின் வழுவாமல், புதல்வர் பலரை ஈன்று, கணவன் விரும்பும் மனைவியாக வாழ்க' என்று அவர்கள் கூறும் வாழ்த்து, சுற்றத்தவர் ஆரவாரத்தோடு புகுந்து, 'பேரிற் கிழத்தி யாகுக' என மணமகளை வாழ்த்தி மணமகனிடம் அவளை ஒப்புவித்தல், இருவரும் ஓர் அறையில் புகுந்து கூடுதல் ஆகிய காட்சிகள் எல்லாவற்றையும் புலவர் தெளிவுபடக் காட்டினார். ஆனால் மணமகன் செயலாக யாதொன்றையும் அவர் குறிப்பிட்டாரில்லை. மணமகள் கழுத்தில் மங்கல அணி அணிந்தான் மணமகன், என்று புலவர் கூற வில்லை. எனவே மங்கல அணி அணியும் வழக்கம் பழந்தமிழரிடை இருந்ததா, இல்லையா என்ற ஐயப்பாடு நம் உள்ளத்தே எழுகின்றது.

மணமகளை வாழ்த்த நால்வர் மகளிர் வருகின்றனர். அவர்கள் சில இயல்புகளைப் பெற்றிருந்தால்தான் வாழ்த்தும் உரிமை பெறலாம்

---

படுகிறார்கள். மக்களிடமும் பணம் பெருகியிருக்கிறது. இச்சாதக மான சூழ்நிலையைச் சிறந்ததான பயன் தரு முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் 200 கோடி ரூபாயை நீண்ட காலக் கடனாகப் பொதுமக்களிடமிருந்து பெற்று விவசாயிகளுக்குக் கடன் தருதல் வேண்டும்; முன்னேற்றத்திற்கான அறிகுறிகளை அறிந்துள்ள கிராமத்தார், இக்கடன் தொகையை விவசாய வளர்ச்சிக்குப் பூரண மாகப் பயன் படுத்திக் கொள்வார்களாக.

இவ்வாறு அரசாங்கம் கடன் கேட்கும்போது, நம் சமூகத்தின் பொருளாதாரப் பெருமுன்னேற்றங் கருதி நாமும் கடன் கொடுத் துதவுவோமாக.

தமிழாக்கியவர்: ச. சிவகுமாரன், M. A. பக்கிங்காம் அண்டு கர்னடிக் கம்பெனி, சென்னை.

என்பதுபோலப் புலவர் அவர்களைப் பற்றி வருணிக்கின்றார். அவர்கள் புதல்வர்களைப் பெற்றுத் தேமல் படர்ந்த வயிறுடையவர்க ளாதல் வேண்டும் ; வாலிழை அணிந்தவர்கள் ஆதல்வேண்டும். இந்த இரண்டு இயல்புகளும் இருந்தால்தான் புரோகித மகளிர்க ளாகும் உரிமை கிடைக்கும்.

மனையறமே மங்கல மானது. அம் மனை யறத்திற்கு நன்கல மாவது நன்மக்களைப் பெறுதல். மங்கல மான மனையறத்தை நாடுவதன் நோக்கம், அம்மனையறத்தின் நன்கலமான நன்மக்களைப் பெற்று, மகிழ்ச்சி யடைவதே யாகும். மக்களாகப் பிறந்தவர்கள் பெறும் பேறுகளுள், புதல்வர்களைப் பெறுதலால் எய்தும் இன்பம் போன்ற இன்பம், மற்றப் பேறுகளால் எய்த முடியாது. 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற' என்று திருவள்ளுவரே கூறுவாரா னால் புதல்வர்களைப் பெறுதலின் இன்றியமையாமையைப்பற்றி அதிகம் கூறவேண்டுவ தில்லை.

ஓர் ஆலமரத்தை, அதிலிருந்து தோற்றும் விழுதுகள், அதன் முதிர்ந்த பருவத்தில் தாங்கிக் கொள்ளுதல்போலப் புதல்வர்கள், பெற் றோர்களுடைய முதிர்ந்த பருவத்தில், அவர்களைத் தாங்கிக்கொள்வார் கள். குடிப்பெயர் உலகில் என்றும் நிலைபெறுவது புதல்வர்களாலேயே. பெற்றோர்க்குப்பின் புதல்வர்கள், அவர்களுக்குப்பின் அவர்கள் புதல் வர்கள் என்று சந்ததி வளர்ந்து கொண்டேயிருந்தால்தான், குடிப்பெயர் அழியாது நிற்கும். கூர்ந்து நோக்கினால், பெற்றோர்களிடம் வேண்டப் படாத, சில தவறான பழக்க வழக்கங்கள், புதல்வர்களாலேயே கெட் டொழியும்.எனவே பழந்தமிழர்கள் மனையறத்தின் நன்கலமான புதல்வர் களைப் பெற்றெடுத்தலில் கண்ணுங்கருத்தும் உடையவர்கள் ஆயினர்.

புதல்வர்களைப் பெற்றுவிடுதலினாலேயே பெற்றோர்கள் கடமை தீர்ந்து விடுவ தில்லை. அப் புதல்வர்கள் அறிய வேண்டுவன வெல்லாம் அறிவதற் குரிய இயற்கையறிவும் நூலறிவும் பெறுமாறு பெற்றோர்கள் செய்தால்தான், அவர்கள், தங்கள் கடமையைச் செவ்வனே செய்தவர் கள் ஆவார்கள். ஈன்று புறந்தருதல் தாயின் கடமையென்றும், சான்றோ னாக்குதல் தந்தையின் கடமை யென்றும் புறநானூறு என்னும் பழந்தமிழ் நூல் விதிக்கின்றது ; பொன் முடியார் விதிக்கின்றார்.

புதல்வர்கள் அறிவுடையவர் ஆதலும், அறிந்தபடி ஒழுகுபவர் ஆதலும் வேண்டும். சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும் ! நல்லுடல் பெறாதவர், நல்லறிவும், நல்லொழுக்கமும் பெறமுடியாது; பிறந்த நாள் முதல்கொண்டு, நோய் வாயில் சிக்கிக் கொண்டால் அறிவு விளக்கம் எங்ஙனம் அடைதல் கூடும் ? நல்லுடல் பெறுமாறு செய்வித்தல், பெற்றோர்களின் முதல் கடமை யாகும். குழந்தைகளாகப் பிறப்பதற்குமுன், முந்நூறு நாட்கள் வரையில், கருவறையில் உயிர்களுக்கு வாழ்க்கை அமைகின்றது. அங்கே

நல்வாழ்க்கை அமைந்தால்தான், கருவறையிலிருந்து வெளியேறியபின் நல்வாழ்வு வாழ உயிர்க்கு இயலும்; கருவறையில் நல்வாழ்வு அமைய வில்லையெனின், சாமளவும் துன்பந்தான். உடல்நோய், உளத்தடுமாற்றம், அறியாமை, மறதி, புத்தி கூர்மையின்மை முதலியனவெல்லாம் ஏற்படுவது கருவறையில் வாழ்க்கைநலம் இன்மையாலேயே. ஆண்டுப் புதல்வர்கள் வாழும் வாழ்க்கையைச் செவ்வையாக இருக்குமாறு போற்றுவது, பெற்றோருக்கு இன்றியமையாதது. கருவறையில் வாழும் முந்நூறு நாட்களுள், உயிர்க்கு, முதல்நாள் முதற்கொண்டே, வாழ்க்கை, நலமாக இருக்கும்படி பெற்றோர் செய்யவேண்டும்.

கருக்கொள்ளும் முதல்நாளை அறிவது, அருமையில் அருமை யாகும். கருவினைத் தாங்கும் மகளிரே இதனை அறிந்துகொள்ள முடிவதில்லை. ஒரு திங்கள் அல்லது இரண்டு திங்களுக்குப் பின்னரே, கருவுற்றிருத்தலைச் சாதாரணமாக மகளிர் அறிந்துகொள்வது வழக்கம். இதற்குள் கருவறையில் தங்கும் உயிர், பல நோய்களையும், துன்பங்களையும் கருக்கொண்டு விடும். பின்னர், அதன் வாழ்க்கை, பெருந்துன்பமாகத்தான் முடியும்.

பண்டைத் தமிழர், எல்லாத் துறைகளிலும் அறிவு மிக்கவர். உயிர், கருவறையில் தங்கும் முதல்நாளையே அறிவதற்குப் பண்டைத் தமிழர் ஓர் உபாயம் அறிந்திருந்தனர். அதுதான் மணவிழாக்காலத்தில் மணமகள் கழுத்தில் மங்கல அணி அணிவது ஆகும்.

மங்கல அணியை, இக்காலத்தில் 'தாலி' என வழங்குகின்றார்கள். தாலி கட்டும் வழக்கம், இந்துக்களாகப் பிறந்தவர்கள் யாவரிடமும் உள்ளது. ஆனால் அதைக் கட்டுவது எதற்கு? அதற்கு விதி எந் நூலில் கூறப்பட்டுள்ளது? எக் காலத்தில் அவ் வழக்கம் ஏற்பட்டது என்று கேட்டால், எவரும் கூறமாட்டாமல் விழிக்கின்றனர். வேதங்களைச் சாங்கோபாங்கமாக ஓதியுணர்ந்த வைதிகப் பெரியார்களும், தங்கள் வேதங்களில், தாலி கட்டுதற்கு ஆதாரம் ஒன்றும் இல்லை எனக் கையை விரிக்கின்றனர்.

தற்காலத் தாலி, பொன் சரடாகவோ, நூற் சரடாகவோ உள்ளது. அதில் பொன்னலான ஓர் உருவம் தொடுக்கப்படுகிறது. அவ்வுருவத்தில் அம்மி, தென்னைமரம், நாமம் முதலான சில சித்திரங்கள் செதுக்கப்படுகின்றன. சரடு, நூலிழையால் அமைந்ததென்றால், மஞ்சளில் முன்னரே அது தோய்க்கப்பட்டிருக்கும். மார்பளவு தொங்குமாறு, மணமகன், மணமகள் கழுத்தில் மூன்று முடிகள் முடிந்து தாலி யணிவான். மணமகனொடு மணமகள் கட்டுண்டாள் என்றோ, மணமகனுக்கு மணமகள் அடிமையானாள் என்றோ, பிறவாறோ தாலிகட்டும் சடங்கிற்குப் பொருள் கூறி மகிழ்வர். எல்லாம் செவி வழக்காறே ஒழிய இவற்றிற்கு நூற் சான்று ஒன்றுமே இல்லை.

பண்டைத்தமிழ் நூல்களாகக் கருதப்படும் சங்க நூல்களில்கூடத் தாலிகட்டும் வழக்கத்திற்கு விளக்கம் ஒன்றும் காணோம். எங்கிருந்து எப்படி எவ்வாறு வந்தது என்பது அறியக் கூடவில்லை.

தாலி என்ற சொல், பண்டைத்தமிழ் நூல்களில் காணப்படுகின்றது. தற்காலத்துத் தாலி என்ற பொருளில், முதல் முதல், சீவகசிந்தாமணி என்ற நூலில், 'தாலி......நல்லார் கழுத்தணிந்து' (2697) என்ற பாட்டில் வருகின்றது. அதற்கு முற்பட்ட இலக்கியங்களிலெல்லாம் தாலி என்ற சொல், தற்காலத்திய தாலி குறிக்கும் பொருளில் வரவில்லை. ஆண் குழந்தைகளும்கூடத் தாலி அணிந்திருந்தனர் என்றால் மணங் குறித்துத் தாலியணியும் வழக்கம் அக் காலத்தில் இருந்ததில்லை என்பது விளங்கும். ஐம்படைத் தாலி என்றும், புலிப்பல் தாலி என்றும், ஆமைத்தாலி என்றும் தாலிகள் பல அக் காலத்தில் திகழ்ந்தன. பாதுகாப்பிற் காகவும், அழகிற் காகவும் அக் காலத்தில் இந்தத் தாலிகளெல்லாம் குழந்தைகளுக்கே அணியப்பட்டன. இந்தத் தாலியே ஒருவாறு திரிந்து இப்போது மங்கல அணியாகத் திகழ்கின்றது போலும் !

மேலே புரோகித மகளிர்களாக, நால்வர், புதல்வரைப் பெற்றவர்களாய், வாலிழை அணிந்தவர்களாய், வந்து மணமகளை வாழ்த்தியதைப் பார்த்தோம். வாலிழை என்பது யாது ? புதல்வரைப் பெறுதலுக்கும் வாலிழையணிவதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? இல்லையென்றால் வாலிழை யணிவதைப் புரோகித மகளிருடைய இலக்கணமாகக் கூறியிருத்தலின் இன்றியமையாமை யாது ?

வாலிழை என்ற தொடர் வருகின்ற இடங்களையெல்லாம் பார்த்தால், அத் தொடரின் பொருள் ஒருபடித்தாகக் காணப்படவேயில்லை. தூய அணிகலன் என்றோ, தூய சரடு என்றோ, வாலிழைக்குப் பொருள் காணப்படுகின்றது. வாலிழை மகளிர் என்பார் தூய அணிகலன்கள் அணிந்த பரத்தையராகக் குறுந்தொகை நாற்பத்தைந்தாம் பாடலில் காணப்படுகின்றனர் ; பேதைப் பருவத்துப் பெண்களாகப் புறநானூறு பதினொராம் பாடலில் காட்சி யளிக்கின்றனர். மணமகளை வாழ்த்தும் வாலிழை மகளிர் தூய அணிகலன்க ளணிந்த மகளிர் என்று கூறிவிடலாம். ஆனால் அதிலொன்றும் பொருட் சிறப்புக் கொள்ளுதற்கு இல்லை. 'வாலிழை மகளிர் நால்வர்' என்ற இடத்தில் 'சுமங்கலிகளான நால்வர்' என்றுபொருள் கூறுவதுதான் சிறப்பளிப்பது. இப்பொருளில் 'வாலிழை' என்பதற்குத் தூய வெண்மையான நூலிழை என்று பொருள் கூற வேண்டும். இந்த வெண்மையான நூலிழையை அவர்கள் எவ்வாறு அணிந்திருந்தனர் என்று கூறுவதற்கு எந்த நூலும் துணை செய்யவில்லை. ஆனால் புதல்வரைப் பெறுதற்கோ, உலகைப் பெறுதற்கோ இந்த வாலிழை தொடர்புடையது எ[illegible] இடங்களில், இத் தொடர் வந்து பொருந்தி [illegible] வி[illegible]ன்றது. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்த[illegible]வரும் பாட்டில், [illegible]மேனி வாலிழை

பாகத் தொருவன் இருதாள் நிழற்கீழ் மூவகையுலகும் முகிழ்த்தன முறையே', என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. வாலிழைக்கும், உலகம் முகிழ்த்தற்கும் ஏதோ தொடர்பு வேண்டியே இவ்வாறு புலவர் குறித்தார் என்று கொள்ள இடமிருக்கிறது. 'இழையணி சிறப்பிற் பழையோள் குழவி' என்பது திருமுருகாற்றுப்படை வரி 259. 'இழையணிந்த சிறப்பினால் பெற்ற குழவி' என்று இவ்வடிக்குப் பொருள் கூறலாம்.

சுமங்கலிகள் வெண்ணிறமான நூலிழை கழுத்தில் அணிந்திருந்தனரோ? மணமகள் கழுத்தில் மணமகன் வெள்ளிய நூலிழை அணிந்தனனோ? நூலிழை, மகளிர் கருக்கொள்ளும் முதல்நாளை அறிவித்ததோ? ஐங்குறு நூற்றிலும், திருமுருகாற்றுப் படையிலும் உலகுயிர்த்தற்கும், புதல்வன் சிறப்புப் பெறுதற்கும் சிறப்புக் கருவியாகக் கொள்ள வேண்டி நூலிழையே குறிக்கப்பட்டதோ? அந்த நூலிழை தொங்குமாறு அணியப்பட்டதோ? கழுத்தொடு கழுத்தாகப் பொருந்துமாறு அணியப்பட்டதோ? அல்லது அணியப்படவே இல்லையா? இவ் வையப்பாடுகளுக்கெல்லாம் தெளிவு உண்டாக்க, நமக்குக் கிடைத்திருக்கும் பழந்தமிழ் நூல்கள் துணையாக வில்லை. பிறமொழி நூல்கள் துணை செய்யுமோ என்று பார்ப்போம்:

எல்லிஸ் துரை மகனார் ஆண் பெண் என்ற இருபாலார், தம்முள் கூடி யின்புறும் இயல்பை, எழு பெரு நூல்களில் ஆங்கில மொழியில் விளக்கியிருக்கிறார். அவற்றுள், ஐந்தாம் நூலில், புதல்வர்களைப் பெறுதலுக்கும், கழுத்தில் நூலணிதலுக்கும் ஒரு தொடர்பு காட்டுகின்றார். ஒருத்தி, தன் கன்னித் தன்மை குன்றாமல் இருக்கிறாளா என்பதை அறியக் கழுத்து நூல் பெரும்பான்மையாக மிக மிகப் பழங்காலத்திய மக்களுக்குக் கருவியாகத் திகழ்ந்தது என்று அவர் கூறுகின்றார். அவர் கூறும் பொருள் கொண்டு பார்த்தால் எங்க காலத்திற்கு முற்பட்டு வாழ்ந்த தமிழா அறிவு புலனாகும். பின்னர்ப் பின்னர்த் தமிழர்கள் பல பொருள்களை உண்மைக் கருத்து அறிந்துகொள்ளமாட்டாமல் விட்டுவிட்டனர்; மாறுபாடாகத் திரித்தும் வழங்கினர்.

மணமகள், மணமகனைக் கூடுதலால் பல வேறுபாடுகள் தோன்றப் பெறுகிறாள். அவள் கூந்தலில் வேறுபாடு. அவள் உறுப்புக்களில் வேறுபாடு; நிறத்தில் வேறுபாடு; அழகில் வேறுபாடு: இவ் வேறுபாடுகளெல்லாம் முதல்நாள் கூட்டத்திலேயே மணமகள்பால் ஏற்படும். முதல்நாள் கூட்டத்திலேயே கரு உண்டாகலாம்; பலநாள் கழித்தும் உண்டாகலாம்; கரு உண்டாகாமலேயும் இருக்கலாம். கருவுற்ற நாள் முதல்கொண்டே, கருவறையில் உள்ள உயிரைப் போற்றிப் பாதுகாக்கத் தமிழன் விரும்பினான்; பலநாள் ஆராய்ந்தான்; முடிவில் கழுத்தொடு கழுத்தாக, வெள்ளிய நூலிழை யணிவதைக் கருவுற்றமையை அறிவதற்குத் துணையாகக் கொண்டான்.

கூட்டம் நிகழ்ந்த முதல்நாளிலேயே கரு ஏற்படுமாயின், மணமகள் கழுத்தில், சிறிது மாறுபாடு தோன்றுகின்றது. கழுத்தின் அடிப் பக்கத்தில், முன் பக்கமாக இரண்டு பக்கங்களிலும், இரண்டு தசைத் திரள்கள் உள்ளன. கரு ஏற்பட்டவுடனே, அவை சிறிது வீக்கம் கொள்ளுகின்றன. வீக்கத்தால் துன்பமோ, நோயோ ஏற்படுவதில்லை. கரு உற்றமையைக் காட்டும் கண்ணாடிகளாக அவை அமைகின்றன. அவை வீங்கும்பொழுது கழுத்தும் சிறிது வீங்கும். அங்கே, வீக்கத்தை யறியக் கண் துணை செய்யமாட்டாது. கண்ணால் அறிய முடியாதபடி, அவ்வளவு நுட்பமாக இருக்கும் அவ் வீக்கம். அவ் வீக்கம் ஏற்பட்டுவிட்டால், ஒருத்தி கருவுற்று விட்டாள் என்று அறிய முடியும். அதனை யறிவதற்கே, வெள்ளிய நூலிழையைக் கழுத்தொடு கழுத்தாய்ப் பண்டைத் தமிழர் அணிந்து வந்தனர் என்னலாம். வீக்கம் ஏற்பட்டவுடன், நூல் இறுக்கத்தால், அவ் வீக்கத்தைக் கண் அறிந்துகொள்ளும். உடனே, கருவுற்ற தன்மையை யறிந்து, முதல்நாள் முதல்கொண்டே, மணமகளுக்கு உணவு,உடை, உறையுள் நியமங்களெல்லாம் ஏற்படுத்திக் கருவினைப் பொன்னேபோல் போற்றுவர். சந்ததி வளர்ச்சிக்கும், புகழிற்கும், தீயன களைதற்கும் உறுதுணையான புதல்வர்கள் நோயில்லா நல்லுடல் பெற்று, நீண்டநாள் அறிவோடு வாழ்வதற்குக் கருவுற்றவளும் அவள் கணவனும் ஆவனவெல்லாம் செய்வார்கள். இப் பணியினும்விடச் சிறந்த பணி வேறு யாது உளது? இவ்வாறு, அறிவோடு ஏற்ற சடங்கு, இன்று அர்த்தமில்லாமல் நிகழ்கின்றது; ஆதாரமில்லாமல் நடைபெறுகின்றது. இச் சடங்கிற்குச் சிறந்த பெயரை இட்டு வழங்குவது தக்கதே யன்றோ? ஆகவேதான், இதனை மங்கல அணி அணிதல் என்றும், மணவணி யணிதல் என்றும் பழந்தமிழர் பாராட்டினர். இவ்வாறு மணவணி யணிந்து, நன்கலமான மக்கட்பேறு பெற்றவர், அதற்கு அறிகுறியாகப் பெருமையோடு அவ் வணியைத் தம் கழுத்திலேயே போற்றுவது இயல்பே யன்றோ? ஆகவே மணநாள் தொடங்கிக் கணவனொடு கூடிவாழும் நாளெல்லாம் மகளிர் அம் மணவணியைப் போற்றத் தொடங்கினர்; வாலிழைமகளிர் எனப் போற்றப் பெற்றனர்.

நஞ்சன்கூடு பல்பொடி
I.D L.61, மெடிகேடட்

I.D.L.21
ச்யாவனப்ராச
சுவாசகோச டானிக்

I.D.L.35.
ஆல்மன்டைன்
பலவிருத்தி, வீர்யவிருத்தி

I.D.L.72.
ஹார்டோன்
ரக்தகோச டானிக்

வியாதி விபரம் எழுதி தபால்மூலம் சிகிச்சை பெறலாம்.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

தொடர் கதை

# விடுதலையா?

(மு. வ.)

(முன்னைய தொடர்ச்சி)

அப்போது முதிய அம்மையார் ஒருவர் தம் பேரனை அழைத்துக் கொண்டு அணிவகுப்பில் நுழைந்தார். அம்மையார்க்கு நரை வந்துவிட்டதே அல்லாமல் இன்னும் திரை வரவில்லை. மூப்பு என்று சொல்லிவிட இயலாது. ஆனாலும் அவர் நிலையினைக் கூற வேறு சொல் இல்லையாகையால், மூப்பின் தொடக்கம் எனலாம். வயது ஐம்பதுக்கு மேற்பட்டிருக்கலாம். சிவந்த மேனியும் கட்டுத் தளரா யாக்கையும் எளிய உடையும் ஒருவகை வீறு அளித்தன. கண்களின் கலக்கமற்ற ஒளி உள்ளத்தின் தெளிவை வெளியாக்கிற்று. நடையில் பெண்மையும் வீரமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. பிரான்சு நாட்டில் வாழ்ந்து வீரப்போர் புரிந்து தீக்கு இரையாகிய ஜோன் என்னும் அம்மையார் இன்னும் முப்பது ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்தால், அவரை இந்த அம்மையாருக்கு உவமையாக்கிக் கூறலாம். ஜோன் ஒரு நாட்டைக் காக்க வாழ்ந்தவர். நரசம்மாள் என்னும் இந்த அம்மையாரோ ஒரு பேரனைக் காக்க வாழ்ந்தவர்.

பேரனைக் கையில் பிடித்துக்கொண்டே தலைமையாசிரியரிடம் நேரே சென்று "வாத்தியாரே! எங்கள் பையனும் உங்களோடு வர வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறான். இன்றைக்கு ஏதோ கொண்டாட்டமாமே. பையனை மறுபடியும் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். அவன் குழந்தை; ஒன்றும் அறியாதவன். மற்றப் பிள்ளைகளைப் போல் வெளியே போய்ப் பழக்கப்படாதவன். பையனைப் பார்த்துக் கொள்ளுங்கள். வீடு வந்து சேரும் வரையில் உங்கள் பொறுப்பு. அப்படியானால் அழைத்துக்கொண்டு போகலாம். இல்லையானால் வேண்டாம்" என்றார்.

தலைமையாசிரியரோ இந்தத் துறையில் பழக்கமுள்ளவர். எவ்வளவோ பெற்றோருக்கு உறுதியும் தேறுதலும் சொல்லிச் சொல்லி வீடு சுற்றி வளர்ந்த சிறுவர்களை நாடு தெரியச் செய்தவர். "பெரியம்மா! எங்கேயும் வெளியூருக்கோ காட்டுக்கோ நாட்டுக்கோ போகவில்லை. ஆலங்காயம் சாலை வழியாகப் போய் ஐந்து ராந்தல் கம்பத்தருகே நின்று அங்கிருந்து கலெக்டர் ஆபீசுக்கு எதிரே போய் இருப்போம். இருநூறு பிள்ளைகள் வருகிறார்கள். பையனோடு பையனாய் வரட்டும். நாங்கள் பார்த்துக்கொள்வோம்" என்று மென்மையும் இனிமையும் ததும்ப மொழிந்தார்.

" மற்ற வீட்டுப் பிள்ளைகள் வேறே. எங்கள் பையன் வேறே. இவனுக்கு எங்களை விட்டுப் பிரிந்து பழக்கம் இல்லை. உங்கள் கையிலே வைத்துப் பார்த்துக் கொள்வதாக இருந்தால் அனுப்புகிறேன். இதோ ஓர் அணா. கொடியோ என்னவோ வேண்டுமாம். பார்த்துக் கொள்ளுங்கள் " என்று அந்தப் பாட்டியார் சொல்லிவிட்டு வீடுநோக்கி அடி எடுத்து வைத்தார். திரும்பித் திரும்பிப் பேரனையும் மற்றப் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டே சிறிது நடந்தார். திரும்பிப் பேரனிடம் வந்து, " அப்பா, திருவேங்கடம் ! பத்திரமாய், வாத்தியார் பக்கத்திலேயே இரு. வாத்தியார் வரும்போது, வா. இங்கே அங்கே வேடிக்கை பார்த்துக்கொண்டு எங்கேயாவது போய்விடாதே. பொழுது போவதற்குள் வந்துவிடு, நான் வரட்டுமா ? பத்திரம் பத்திரம் " என்று சொல்லிவிட்டுச் சென்றார். பூனை குறுக்கே வராமையாலும் காலைக் கல் தடுக்காமையாலும் ஒன்றும் ஐயுறாமல், " பையன் வந்திடுவான் " என நம்பியது அந்தப் பேதை மனம்.

திருவேங்கடத்தின் வெல்வெட்டுக் கோட்டுக்குப் பச்சைநிறக் கொடி வந்து பொருந்தியது. அவனுடைய சரிகைக் குல்லாய் குடுமியை உள்ளே அடக்கிக்கொள்ளாமல் வெளியே தெரியவிட்டது. அரையில் கட்டிய வெள்ளாடையின் சரிகைக்கரை குல்லாய்க்குப் போட்டியாக விளங்கியது. இடுப்பில் நிற்காத அந்த ஆடையை அடிக்கடி இழுத்துக் கட்டும் தொல்லையைப் போக்கப் பாட்டியார் கட்டிய கச்சு, பேரனுடைய வயிற்றை இறுக்கியது. ஆறு வயதுள்ள சிறுவன் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வது இவ்வளவு திண்டாட்டமாக இருந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் சிறுவர் உலகம் இப்படி இருந்தது. வீட்டை விட்டுப் பெற்றோர் அனுப்புவதும் அருமை; பெற்றோர் அனுப்பினாலும் சிறுவர் துணிந்து திரிவதும் அருமை. இந்தக் காலத்திலோ, அந்த வயது சைகில் உருட்டிக் கற்கும் வயதாகும். ஆடை வகையிலும் இப்போது அவ்வளவு தொல்லையில்லை. அரைக்கால் சட்டை அணியாத சிறுவனை இப்போது நாட்டுப்புறத்திலும் காண்பது அரிது. குடுமியும் குல்லாயும் இந்தக் காலத்துச் சிறுவர்கள் " பைத்தியக்காரன் ", " பட்டிக்காட்டான் " என்று எள்ளி நகையாடும் கோலங்கள். ஆசிரியர் கையைப் பிடித்துக்கொண்டு கொண்டாட்டத்துக்குச் செல்லும் சிறுவர்கள் இந்தக் காலத்தில் வெறுங்கற்பனை. ஆசிரியர்களின் துணையும் தூண்டுதலும் இல்லாமலேயே இக்காலச் சிறுவர்கள் ஊர்க்கொண்டாட்டங்கள் எல்லாவற்றிலும் சென்று அங்கே அமைத்துள்ள நாற்காலிகளையெல்லாம் நிரப்பி, கொண்டாட்டத்திற்கு வரும் பெரியவர்களுக்கு இடமில்லாமல் திகைக்கச் செய்கின்றார்கள். இது உலக முன்னேற்றத்தின் அறிகுறி அல்லவா ? சிறுவர்கள் இந்த அளவில் பெற்ற உரிமை உருப்பட்டால் இன்னும் நான்கைந்து நூற்றாண்டுகளுக்குள் மக்கள் வாழ்வு முழுவதிலும் உரிமை நிலவுதல் கூடும்.

ஆனால் திருவேங்கடம் வளர்ந்த குடும்பமும் வேறு; வாழ்ந்த காலமும் வேறு. இவன் மூன்று குடும்பங்களுக்கு ஒரு மகனாய் - ஆண் குழந்தையாய் வளர்ந்து வந்தான். இவனுடைய பெரியப்பனுக்கு மகனாய் இருந்தவன் இறந்திட்டான். எனவே அந்தக் குடும்பத்திலும் ஆண் மகன் இல்லை. இவனுடைய தாய் தந்தையர்க்கோ இவன் ஒருவனே ஆண்குழந்தை. இவனுக்கு முன் பிறந்த இருவரும் பெண்கள். இவனுடைய தாயைப் பெற்ற குடும்பத்திலோ ஆண் பிறக்கவேயில்லை. பிறந்த ஒரு குழந்தையும் பெண்; அதுவே இவனுடைய தாயாக வளர்ந்த அம்மையார். அந்த ஒரு பெண் குழந்தையின் தாயே இவனை அழைத்துவந்து தலைமையாசிரியரிடம் விட்ட நாரசம்மாள். தம்முடைய மகள் வயிற்றில் ஓர் மகன் பிறக்கவேண்டும் என்று அந்தப் பாட்டியார் தவம் கிடந்தார். தாம் பிறந்த காஞ்சி நகரில் கோயில் கொண்டிருந்த திருமாலைப் பலகாலும் வேண்டி வந்தார். ஒருமுறை இக்கருத்தோடு திருப்பதிக்குச் சென்று நெடுமாலை நோக்கித் தொழுது வேண்டினார். பிள்ளைவரம் கேட்போர் செய்யும் சடங்கைப் பின்பற்றி அந்த ஏழுமலையில் ஓர் அடுப்பை மூட்டி வந்தாராம். வேங்கடத்தான் அருள் செய்யப் பிறந்த குழந்தையே திருவேங்கடமாய் இன்று குல்லாயும் சரிகைக்கரையுடையும் அணிந்து சுகாதாரக் கொண்டாட்டத்திற்காகக் கடைத்தெரு வழியாகச் செல்லும் ஊர்வலத்தில் மாணவர் குழுவில் இருந்தவன். அவன்மீது தலைமையாசிரியர்க்கு ஒரு கண் இருந்தே வந்தது.

ஊர்வலம் பாட்டொலியோடு நகர்ந்தது. "செந்தமிழ் நாடு எனும் போதினிலே" என்னும் பாட்டு அக்காலத்துப் பள்ளிக்கூடங்கள் அறியாத ஒன்று. அதைப் பாடிய பாரதியாரும் அந்தக் காலத்து மக்களுக்கு யார் என்று தெரியாது. அரச வாழ்த்துப் பாட்டும் கடவுள் வாழ்த்துப்பாட்டும் ஆசிரியர்கள் கற்றுக்கொடுத்துப் பாடச் செய்தார்கள். கலெக்டர் ஆபீசின் எதிரே சென்று நின்று ஒரு பாட்டுப் பாடி முடித்து மாணவர்கள் உட்கார்ந்தார்கள். அந்தக் கூட்டத்தின் முன் வரிசையில் இருந்தான் திருவேங்கடம்.

குறித்த நேரம் கழிந்ததும் ஒவ்வொருவராகப் பெரியவர்கள் வந்து உட்கார்ந்தார்கள். இசை முழக்கம் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் விரும்பும் 'பாண்டு' என்னும் இசையும் கலந்தது. கலெக்டர் ஆங்கிலேயர் ஆகையால் அவர் விரும்பும் இசை அங்கு வந்தது. அவர் விரும்பும் மொழி அந்த இசையைவிட வீறுகொண்டு விளங்கியது. மாலைகள் கழுத்துக்களில் விழுந்தன. விழுந்ததும் கழன்று மேசைகளின் கிடந்து உறங்கின. கைகள் தட்டின. ஒவ்வொருவராக எழுந்து சிலர் பேசினர். ஏ, பி, சி என்னும் எழுத்துக்களும் அறியாத இளஞ்சிறுவர்கள் பலரை உட்காரவைத்து விட்டு, ஆங்கிலத்தில் திறம்பட எழுதி வந்த வாக்கியங்களைச் சிலர் படிக்கத் தொடங்கினார்கள். படிக்கும்போது, அஞ்சாத மாணவர் சிலர் பேச முயன்றார்கள்.

அஞ்சி அடங்கிய மாணவர் பலர் தூங்க முயன்றார்கள். ஆசிரியர்கள் அடிக்கடி தலையிட்ட காரணத்தால் இருவகை முயற்சியும் பயன்படவில்லை. ஒவ்வொரு முறையும் படித்து முடிந்த பிறகு பெரியவர்கள் வன்மையாகக் கைகளைத் தட்டினார்கள். அப்போது சிறுவர்கள் உண்மையான ஊக்கங்கொண்டு தம் சிறு சிறு கைகளை உரத்தோடு தட்டினார்கள். அவர்கள் அப்படியே தட்டிக்கொண்டு மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் ஆசிரியர்கள் அதிலும் குறுக்கிட்டுப் "போதும் போதும்" என்று கையமர்த்திக் கத்தியபோது இளைய உள்ளங்கள் திகைப்பு உற்றன. மறுபடியும் கைதட்டும் வாய்ப்பு வருமா என்று காத்திருந்தார்கள் சிறுவர்கள்.

இனிப்புப் பொட்டலம் வரும் வரும் என்று சிறுவர்கள் பலரும் காத்திருந்தார்கள். ஆனால் இதுவரையில் ஒன்றும் வரவில்லை. நான்காம் வகுப்பு ஐந்தாம் வகுப்புச் சிறுவர்கள் ஆசிரியர்களிடம் அஞ்சும் அச்சம் குறைந்தவர்கள். ஆதலால், ஒரு சிலர் மெல்ல எழுந்தார்கள்; எழுந்தவர்களில் சிலர் நகர்ந்தார்கள்; இந்தக் காட்சிகளில் திருவேங்கடத்தின் மனம் சென்றது. "பொழுது போவதற்குள் வந்து சேர வேண்டும்" என்று பாட்டியார் இறுதியில் சொன்ன சொல் அவன் நினைவுக்கு வந்தது. சுற்றிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். பெரியவர்களும் ஒரு சிலர் எழுந்து செல்வதைக் கண்டான். அவன் மனமே அல்லாமல் வயிறும் வீட்டை நினைப்பூட்டியது. பகலுணவு உண்ணும்போது கொண்டாட்டத்திற்குப் போகவேண்டும் என்று பாட்டியாரிடத்தில் போராடி வெல்லும் முயற்சியில் வயிற்றை மறந்தான்; கால்வயிறும் உண்ணாமல் கவலையோடு பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தான். ஊர்வலத்தில் கலந்து காணாதன கண்டு, கூட்டத்தில் இருந்து கேளாதன கேட்டு, ஆசிரியர்க்கு அடங்கி எண்ணாதன எண்ணிய அவனுக்கு இப்போது வயிறு கிள்ளிற்று. பொழுதோடு போகத் துணிந்த மனத்தின் முயற்சிக்கு வயிறும் துணை செய்தது.

அவன் மெல்ல எழுந்தான். அந்த நேரத்தில் கலெக்டர் மாணவர்களுக்கு அழகான பரிசுகள் வழங்கிக்கொண்டிருந்தார். தலைமையாசிரியரின் நோக்கமும் மற்றவர்களின் பார்வையும் கலெக்டர் மேசையில் இருந்தன. திருவேங்கடம் மெல்ல நடந்து சாலையின் ஓரத்தில் வந்து சேர்ந்தான். இதுதான் வந்தவழி என்று தெற்கு நோக்கித் தயங்காமல் நடந்தான்.

ஆறு வயதுள்ள சிறுவனுக்குத் தெற்கு என்றும் கிழக்கு என்றும் வேறுபாடு இல்லை. கிழக்கு மேற்கு என்னும் பகுப்பு அவனுக்குக் கண்மூடி வழக்கமாக - மூட நம்பிக்கையாக இருக்கும். சூரியன் தோன்றுவது கிழக்கு என்று சொல்லிக்கொடுத்து வற்புறுத்தும் வயது அது அல்ல. அப்படி வற்புறுத்தினாலும் சூரியன் மறையும் திசையும் கிழக்குத்தான் என்று அவனுடைய மூளை வற்புறுத்தும். சூரியனை நோக்கி நின்று பார்க்கும்போது இடக்கைப்பக்கம் வடக்கு என்றும் வலக்கைப்

பக்கம் தெற்கு என்றும் தெளிவாக்கினால், அவன் ஒரு சுற்றுச் சுற்றி வேறு வகையாக நின்று, தெற்கை வடக்கு என்பான்; வடக்கைத் தெற்கு என்பான். கையால் பற்றியோ, கண்ணால் கண்டோ, செவியால் கேட்டோ அறிய முடியாதவற்றை அவன் எள்ளுவான்; அவனுடைய அறிவுலகத்தில் அவற்றை மூடநம்பிக்கை எனத் தள்ளுவான்.

ஆறுவயது சிறுவனுக்கு இவை எட்டாதவை. பதினாறு வயது இளைஞனுக்குக் கீழ்வீடு மேல்வீடு என்பவை பெருமயக்கம் விளைக்கின்றன. நாட்டுப்பற்றுக்கொண்ட இளைஞனுக்குக் கீழ்நாடு மேல்நாடு என்னும் தொடர்கள் திகைப்பைத் தருகின்றன. இவையெல்லாம் சொல்லால் வரும் மயக்கம். ஆனால் அறுபது வயது நிரம்பிய முதியவர்க்கும் திசைமயக்கம் உண்டு. புதிய ஊருக்குச் சென்றவர் பலர் நண்பகலிலும் இரவிலும் திசையறியாமல் மயங்குகின்றார்கள்; அறிவித்தாலும், இது எப்படித் தெற்காகும், இது தானே வடக்கு எனத் தயங்குகின்றார்கள். ஆகையால், திசையறியாத் திருவேங்கடத்தின்மீது குற்றமே இல்லை.

அவன் நம்பிக்கையோடு வீட்டை நாடிப் பாட்டியை நினைந்து நடந்த சாலை கண்ணமலைச்சாலை எனப்படும். அவன் சென்ற திசையோ தெற்கு. செல்ல வேண்டியதோ கிழக்கே உள்ள ஆலங்காயச்சாலை. இரண்டும் ஓரிடத்திலிருந்து பிரியும்போது வேறுபாடு தெரியுமா? வண்டிகளின் சக்கரம் சென்று சென்று தேய்ந்த தேய்வும், இருபுறமும் எழுந்து விளங்கும் கற்களின் தோற்றமும், மக்கள் நடமாட்டமும், மரங்களின் தலையசைவும் திருவேங்கடத்தின் உள்ளத்தில் 'வந்த வழி இதுதான்' என்ற நம்பிக்கையை விளைத்துவிட்டன. ஆதலின் முதலிலேயே "இதுதானா வழி" என்ற ஐயமே எழவில்லை. அவனுடைய மனம் நினைந்ததெல்லாம் "பொழுது போவதற்குள் போக வேண்டும்" என்னும் ஒன்றே.

அப்போது மணி ஆறரை. பொழுது எனப்படும் கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். அவனைத் தொடர்ந்து செல்லும் ஒளி இன்னும் ஊரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. விளக்கொளி அங்கங்கே வந்து பரவிக் கொண்டிருந்தது.

திருவேங்கடம் நடந்தான். அவனுடைய கால்கள் சாலையில் நடந்தன. ஆனால் மனமோ தான் பழகிய அந்தத் தெருவை நாடியது; ஆனால் கடைத்தெருவோ இல்லை; அதனை அடுத்த முத்துக்காரத் தெரு முனையோ வரவில்லை. பள்ளிக்கூடக் கட்டிடமோ கண்ணிற்கே தெரியவில்லை. வீடோ இருப்பதாகவே தெரியவில்லை. இவையெல்லாம் இனிவரும் என்னும் நம்பிக்கை தளர்ந்தது. இரண்டு பர்லாங்கு நடந்ததும் வீடுகள் ஒழுங்காக ஒன்றை ஒன்று அடுத்து அடர்ந்திருப்பது போய், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் காணப்பட்டன. அவையும் அற்றன. தெருக்கள் ஒன்றும் இல்லை, தொலைவில் சிறு

குடிசைகள் தெரிந்தன. வெறுந்தரையும் காணப்படாமல் எவையோ நெல்லும் புல்லும்போல் தெரிந்தன. நெல் விளையும் மரம் என்று கூறினாலும் உண்மை என்று நம்பும் திருவேங்கடம் காணாத வயல்களைக் கண்டான். அவற்றைப் பாடத்திலும் படித்திராத காரணத்தால் காடு என எண்ணினான். யானையின் பாடம் முதல் வகுப்பிலேயே வருவதால் யானையை நினைத்தான். "சுகாதாரம் என்பது யானையா, அது எங்கே இருக்கிறது ?" என்று கேள்வி கேட்டவனுக்கு விடை வந்து சேர்வது போல் தோன்றியது. போதாக்குறைக்கு ஒளியெலாம் மறைய, ஊர் இல்லாக் குறையால் விளக்கொளியும் இல்லாதிருக்க, இருள் மூடியது. அந்த இருளைக் கண்டு அஞ்சி அலறினான். அதற்குமுன் ஆண்டில் தன் தமக்கையரோடு சேர்ந்து கூடத்து விளக்கணைந்தபோது கூக்குரலிட்டு நடுங்கி அஞ்சின அச்சம் அப்போதும் அடைந்தான். தெருமுனையும் பள்ளிக்கூடக் கட்டிடமும், முறுக்குக் கடையும் மற்றவைகளும் தோன்றாமையால் மயங்கிக் கலங்கினான். இனி வீடும் வருமா, பாட்டியும் அம்மாவும் வருவாரா என நினைந்து விம்மினான். பித்தர் மனம் கொண்டு நினைப்பற்று, வெறியர் மனம்கொண்டு விரைந்து நடந்தான். பொறி புலன்கள் நெறிகலங்கி, நாடி நரம்புகள் நிலை தடுமாறி, கால்கள் இயந்திரம்போல் இயங்கின. நடை ஓட்டமாயிற்று; விம்மல் அழுகையாயிற்று; எண்ணம் அலறலாயிற்று. பாட்டியை அம்மா என்று அழைக்கும் மனத்தில் 'அம்மா' என்ற ஒலியே எண்ணமாய் நிற்க, அதுவே அலறலாயிற்று. "அம்மா, அம்மா" எனக் கூவிக்கொண்டு அழுதுகொண்டு ஓடினான் சிறுவன். அந்த நள்ளிருளில் அவன் செவியில் ஒன்றும் கேட்கவில்லை. குள்ளநரிகள் ஊளையிட்டன. பிறவிலங்குகள் உறுமின. அலறலுக்கும் அழுகைக்கும் இடையே ஒன்றும் கேட்கவில்லை; பாட்டியை நினைந்த மனம் அச்சம் மீதூர்ந்து அவன் செவியைச் செவிடாக்கிற்று. சாலையின் இருமருங்கும் என்ன இருந்தன என்பதை அவன் கண்கள் அறியவில்லை. அச்சத்தை வளர்த்த இருள் அவனுடைய கண்களின் எதிரே தன்னை ஒழிய வேறொன்றும் தோன்றாதபடி செய்திட்டது. அத்தகைய அருளாவது இருள் என்னும்பேய்க்கு இருத்தல் பாராட்டுக்கு உரியதே. இல்லையானால், அந்தக் குழந்தைக் கண்ணெதிரே அந்தத் தனிமை வெறியிலே எது தோன்றியிருந்தாலும் கொடுமையாய்த் தோன்றியிருக்கும். இருளும் அருள்கொண்டது. சிறுவன் இருண்ட வானமும் மருண்ட சாலையும் தவிர வேறொன்றும் அறியாமல் ஓடினான்.

சிறுவன் தன்னை மறந்தான். கால் ஓட்டத்தை மறக்கவில்லை; வாய் அலறலை மறக்கவில்லை. இரண்டு கல் தொலைவு ஓடிவந்தாயிற்று. கூப்பீடு தூரத்தில் விளக்கு ஒன்று தெரிந்தது. இருவர் பேச்சுக் கேட்டது. தன் பாட்டியோ என எண்ணினான் சிறுவன். எண்ணியதும் தன்னை நினைத்தான்; காலின் ஓட்டமும் வாயின் அலறலும் பன்மடங்கு மிகுந்தன. அழுகைக் குரல் இருவர் மனத்தையும் உருக்கிற்று. (தொடரும்)

# எது இசை?

அன்பு கணபதி

தமிழில் எது இசை என்று சிலர் கேட்டார்கள். தாங்களும் தமிழர்கள் என்று சொல்லிக்கொண்டே கேட்டார்கள். அதுமட்டும் அல்ல. தமிழில் பாட்டுக்கள் ஏது, இசைக்குத் தமிழ் ஏற்றதாகுமா, என்ன இருந்தாலும் தமிழுக்கு இனிமை எங்கிருந்து வரும் என்றெல்லாம்கூடக் கேட்டார்கள். அது ஒரு காலம். அந்தக்காலம் மலை ஏறி விட்டது.

இன்று எங்குப் பார்த்தாலும் தமிழ்நாட்டு இசை அரங்குகளில் தமிழ்ப்பாடல்கள் முழங்குகின்றன. மூன்று மணி நேரமும் முழுவதும் தமிழ்ப் பாட்டுக்களை பாட முடியும் என்பதை மெய்ப்பித்து வருகிறார்கள் தமிழிசை வாணர்கள். தமிழ் மக்களும் சலியாது ஆர்வத்துடன் கேட்டு ஆனந்தம் அடைகின்றனர். முன்பெல்லாம்விட இசை வளர்க்கும் சங்கங்களும் இன்று ஏராளமாகப் பெருகி உள்ளன. இசைவாணர்களின் எண்ணிக்கையும் கணக்கில் அடங்காது நாள்தோறும் பெருகி வருகின்றது. இந்நிலை வரவேற்கத் தக்கதே.

ஆனல், இவற்றால் மட்டும் தமிழிசை வளர்ந்துவிடும்; தமிழர்கள் முன்னேறி விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது. வீழ்ச்சி அடையாமல் இருக்கவேண்டுமே என எண்ணவேண்டியிருக்கின்றது. காரணம் இல்லாமல் வரவில்லை இக்கலக்கம். அக்காரணம்தான் என்ன என்று பார்ப்போம்.

ஒரு நாட்டு மக்களிடையே விழிப்பு ஏற்படுமானால், அவ்விழிப்பு அந்த நாட்டு மக்களுக்கு எழுச்சி தருவதாக—உயர்வு கொணர்வதாக இருக்கவேண்டும். இல்லையானல் அவ்விழிப்பு ஏற்படுவதும் ஒன்றுதான்; ஏற்படாதிருப்பதும் ஒன்றுதான். இன்று தமிழ் நாட்டில் இசை உலகத்தில் ஏற்பட்ட விழிப்பு தமிழ் மக்களுக்கோ, தமிழ் இசைக்கோ உயர்வு தருவதாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும்.

முன்னைய 'சங்கீதக் கச்சேரிகள்' இன்று இசை அரங்குகளாக மாறி உள்ளன. இசை அரங்குகளில் உலவிய பிறமொழிப் பாடல்கள் நீங்கி, தமிழ்ப் பாடல்கள் இன்று இடம் பெற்றுள்ளன. புரியாத பாடல்களைக் கேட்டுக் கேட்டுத் திகைத்த உள்ளம், இன்று புரியும் பாடல்களைக் கேட்டுப் புன்னகை பூக்கின்றது. அன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக சங்கீத சபாக்களைக், கண்டோம். இன்றோ நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் தமிழிசைச் சங்கங்களைக் காணுகின்றோம். இவை எல்லாம் தமிழிசையின் முன்னேற்றத்தைத் தமிழ் மக்களின் எழுச்சி

யைக் குறிப்பன அல்லவா என்று நீங்கள் கேட்கலாம். உங்கள் கேள்வியில் ஓரளவு உண்மை இருந்தாலும், இவைகளால் மட்டுமே தமிழிசை வளர்ந்துவிடாது ; தமிழர்கள் உயர்ந்துவிட மாட்டார்கள்.

முன்பு தெலுங்கு முதலிய பிறமொழிகளில் கேட்ட பாடல்களை, இன்று தமிழில் கேட்கின்றோம். மொழி மட்டுமே மாறி இருக்கிறது ; பொருளில்—அர்த்தத்தில், ஏன் போக்கிலும்கூட வேறு மாற்றமே கிடையாது. முன்பு பாடல்களின் பொருள், ஒன்றும் புரியாதிருந்தது ; இன்று புரிகின்றது, இராக தாளங்கள் அனைத்தும் பழைய 'சபாக் கச்சேரி' பாணிதான். இங்கு நாம் கவலைப்படுவதெல்லாம் இராக தாளங்களைப் பற்றியல்ல ; பாடல்களின் கருத்துக்களையே குறிப்பிடுகிறோம். இராக தாளங்கள் சங்கீத வேலைப்பாடுகள் எல்லாம் உயர்ந்தவர்கள் என்போர் ரசிக்கக்கூடியன. நடுத்தர நிலையில் உள்ளவர்களுக்குக் கூட உழைப்பினால் உண்டான களைப்பினைப் போக்கிக் கொள்வதற்கு ஓரளவும் உதவி செய்வதாக இல்லை, இன்று இசை அரங்குகளில் பாடப் படும் பாடல்கள் எல்லாம். இந்நிலையில் பாமர மக்களுக்கு இப்பாடல் கள் என்ன பயன் தருகின்றன என்பதைப் பற்றிக் கேட்கவே வேண்டிய தில்லை.

தொழிலகத்தில் நாளெல்லாம் உழைத்து அலுத்து ஓய்ந்து வருகின்றான் ; காசையும் கொடுத்துக் 'கச்சேரி' கேட்கச் செல்லுகின்றான் 'கந்தர்வகான சபைக்'குள். அங்கு அவன் கேட்கும் இசை அயர்ச்சியைப் போக்கி உணர்ச்சியைத் தருவதாக இருக்கலாகாதா ? 'எல்லாம் அவன் செயல்' 'நம்மால் என்ன ஆகும்' என்ற கருத்துக்களைக் கொண்டவையாகத்தானே இருக்கின்றன. இக்கருத்துக்கள் தவறானவை என்று நாம் கூறவில்லை ; உயர்ந்தனவாக இருக்கட்டும். அலுத்து வந்த அவனுக்கு அந்த நேரத்தில் இவை அவசியமா ? அவனுக்குக் குடும்பத்தில், தொழிலகத்தில் எத்துணைத் தொல்லைகளோ, யார் அறிய முடியும் ? அவன் மனத் தொல்லைகளைப் போக்கி உற்சாகத்தையும், வாழ்க்கையில் ஒரு பற்றுதலையும் உண்டாக்கக் கூடியனவாக அப்பாடல்கள் இருப்பது எவ்வளவு நல்லது ? இருக்கின்றனவா ? இருக்க வேண்டாமா ? 'வாழ்வை நம்பாதே; அதுகானல் நீர் போன்றது' என்ற கருத்தமைந்த பாடல்கள் அவனுக்கு எதற்கு ? 'வாழ்வை விரும்பு ; வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற பொருள் பொதிந்த பாடல்கல் அல்லவா அவனுக்கு நன்மை தரும். 'சம்சார பந்தத்தில் ஆழ்ந்து சங்கடப்படாதே' என்று ஒரு பாகவதர் பாடுகிறார். இதில் தம் 'கைவரிசைகளைக் காட்டுகிறார்.' பல 'சங்கதி'களைப் போட்டு, உதிர்க்கின்றார். ஆனாலும் பயனென்ன ? 'குடும்பத்தில் பல துன்பங்கள் வரலாம். நீ மனைவி மக்கள் சுற்றம் நட்பொடு வாழப் பிறந்தவன். துன்பங்கண்டு சோர்வடையாதே. எதிர்த்து நின்று இன்பம் பெறு' என்ற கருத்துக்களை அல்லவோ புகட்டவேண்டும். அவ் வாறு புகட்டும் முறையில் அப்பாகவதர் தம் 'இழைப்பு வேலை'களைக்

காட்டட்டும். அதனுல் கேட்பவன் உள்ளத்தில் கிளர்ச்சி எழும்; அவன் வாழ்வும் வளம்பெறும்.

ஒன்று பாருங்கள். ஒரே பாடலை ஒவ்வொரு இசைவாணரும் எத்தனை இசை அரங்குகளில் எத்தனை முறை பாடுவது! கேட்பவர்களுக்கு என்ன இரும்புக் காதுகளா இருக்கின்றன; ஒரே பாடலை தினசரி ஒவ்வொரு இசைவாணரிடத்தும் கேட்பதற்கு? இசைவாணர்களுக்குத்தான் அலுப்புத் தட்டுகின்றதா என்றுல் அதுவும் காணேம்! ஓர் உதாரணம்; 'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே அலுத்தேன்' என்பது ஒரு பாடல். இப்பாடலை, எத்தனை மேடைகளில் எத்தனை வித்வான்களிடம் எத்தனை முறை கேட்டிருப்பார்கள் தெரியுமா தமிழ் நாட்டு மக்கள்! அடடா தமிழிசை வாராதா என்று எண்ணிய நெஞ்சம் இதைப் பார்க்க என்னென்னவோ நினைக்கின்றதே! இது குறித்து அன்று தமிழ்நாட்டு இசைச் சங்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் அறிஞர் சர். சண்முகம் அவர்கள் 'இப்பாடலை எத்தனையோ முறை கேட்டுக் கேட்டே அலுத்தேன்' என்று மனம் நொந்து கூறியதை நாம் முகாரி இராகத்தில்தான் பாடி ஆறுதல் கொள்ளவேண்டும்!

தமிழிசை உண்மையிலே வளரவேண்டுமானுல்—தமிழ் மக்கள் வாழ்க்கை தழைக்க வேண்டுமானுல், இசை உலகில் மேலும் ஒரு பெரும் புரட்சி ஏற்படவேண்டும். உழுத சாலிலேயே உழுவதோ, பழைய பானத்தைப் புதிய கோப்பையில் தருவதோ கூடாது. இசைக் கலையால் தமிழ் நாட்டை—தமிழ் மக்களைப் பலவகையில் முன்னேற்றலாம். உலக நாடுகளின் முற்போக்கு வேகத்தை நம்மோடு ஒப்பிட்டால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமையைத்தான் உதாரணமாகக் கூறமுடியும். அவ்வளவு பின்னே இருக்கின்றேம் நாம். இந்நிலையில், 'இசை உலக சம்பிரதாயம் கெடும்' 'இசையின் தரம் குறையும்' என்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டு பழைய பாட்டையிலேயே செல்ல நினைப்பது இசைக் கலையை வளர்ப்பதாக ஆகாது? அது வெறும் கேலிக் கூத்தாகவே முடியும்.

புரியும் மொழியில் பாடுவதும், அதைக் கேட்பதும் மட்டும் இசை அல்ல. இசை, இசைப் பாடல்களின் கருத்துக்கள், தளர்ந்தவனைக் கிளர்ந்து எழச் செய்வதாக இருக்க வேண்டும். இனப்பற்றையும் நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் உண்டாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். உண்மையின் உயர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும் பெண்மையின் பெருமையையும், அன்பின் மாண்பினையும் அறிவிப்பதாக இருக்கவேண்டும். சீர்திருத்த எண்ணத்தைச் சிந்தையில் புகுத்துவதாக இருக்கவேண்டும். நவீன காலத்து வாழ்க்கை முன்னேற்றத்திற்கான எல்லாப் பொருள்களைப் பற்றியதாகவும் இருக்கவேண்டும்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல் தமிழில் இசை என்றுல், தமிழ் மொழியில் மட்டும் இருந்தால் போதாது; தமிழ் வழியிலும் இருக்கவேண்டும்.

# கண்ணே ! அஞ்சற்க !

*'தமிழன்'*

'கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண்' என்றான் வள்ளுவன். கண் ஒருவனை வாழ வைக்கிறது. வீழவும் வழிகாட்டுகிறது என்பாரும் உளர். கண்ணே கருத்துக்கும் துணையாகிறது. கண்ணின்றேல் காண்பதில்லை - கருத்தில்லை - கற்பனை இல்லை - காதல் இல்லை. கண் வாழ்வின் ஒளி ! கண் வாழ்வின் வழிகாட்டி. கண் அனைத்துக்கும் ஆதரவு !.........

கண்ணே ! உன் திறம் பெரிது ! நீ வாழ வைக்கும் வழியறிந்தாய் ! உன் நிலை உயர்ந்ததன்றோ ! நீ இமையும் இடம் நோக்கி ஏற்ற முறுகின்றாய்! உன் வலி பெரிது ! உன்னை உறுதியாகப் பற்றியவர் வாழ்கின்றார்கள் ! அல்லார் தாழ்கின்றார்கள்.

கண் பொல்லாது என்று அறிந்தோர் கூறுர். உன்னை நன்றாக அறிந்து கொள்ளாதவர்கள் உன்மேல் குறை சொல்லுகிறார்கள். கண் வழி கருத்து செல்லும். கருத்தில் நல்லதும் பொல்லதும் தோன்றும் ! வாழ்வதும் வீழ்வதும் உன்னால்தான் என்பர். பெரும்பாலான மக்கள் வழுக்கி வீழ்வார்கள். அதற்கு நீயா காரணம் ?

கண்ணே ! உன் அறிவு பெரிது ! கலைபாக - உணர்வாக - உயர்வாக - உள்ளம் அமைந்து உன்வழி காண்பன பல. கலை நலம் பெற்ற உளத்தொடு ஒன்றுபடும்போது உன் ஏற்றம் பெரிதாக உயர்கின்றதே ! நீயன்றோ கவிஞன் உள்ளத்தே கவி ஊற்றெடுக்கச் செய்கின்றாய். ஆடும் இலை - ஓடும் நீர் - பாடும் பறவை - கூடும் எழில் இவை அனைத்தையும் நீ காட்டக் காண்கின்றான் கவிஞன். அவர் கவிச் சுவர் எல்லாம் உன் பீடத்தின் மேலன்றோ கட்டப்படுகிறது.

கலைஞன் இயற்கையைக் காண்கின்றான், நீ காட்டத்தான். உன் துணைகொண்டு அவன் உலகில் உயர்கின்றான். அவன் தூய உள்ளத்தே கல்லிடம் கலைமலரச் செய்கின்றாய் ! மலையிலே கலை விளங்கச் செய்கின்றாய் ! ஓடையிலே ஊற்று ! சாலையிலே சாறல் ! இவை அனைத்தும் நீ காட்டும் காட்சி ! அந்தக் காட்சியில் முகிழ்த்தன இன்று உலகம் போற்றும் கலைகள் ! கலைக்கு முதற் காரணமான கண்ணே ! உன் பெருமை பெரிது !

புலவர்கள் உன்னைப் புகழலாம், நீ இல்லாது வாழ்க்கை வாழ முடியாது என்பதற்காக ! நான் உன்னை வாழ்த்துகின்றேன். அக்காரணத்திற்காக மட்டும் அல்ல ! ஐயோ ! அந்த ஒரு காரணம் மட்டும்தானா உன்னைப் புகழ்வதற்கு ! அந்தப் புகழ்ச்சிக்கு நீ உரியவனோ ! அல்லனோ!

என் வாழ்த்துக்குரியை! காண்பதற்குக் கண் என்றால் அந்தப் பார்வையைப் பாழ்படுத்தும் அந்தகர் எத்தனைபேர்! இயற்கை நலத்தைக் காண்க என்று வாரி வழங்குகின்றாய் நீ! காண்கின்ற உள்ளங்களில் பல, அந்த இயற்கைகளை - எழில்களை - இன்முகங்களை - அசைந்தாடும் அழகுகளைத் தம்மதாக்கிக் கொள்ள எண்ணுகின்றனவே! அந்தோ! அங்கு அனைத்து அருமைப்பாடும் அறிந்துகொள்ளா வகையிலே கெடுகின்றனவே! அவர்கள் உன் பணியை உணர்ந்து கொள்ளவில்லை! அவர்கள் வாழினும் வீழினும் என்!

இதோ கவிஞன் - கலைஞன் - கருத்துடையவன் - கற்பனைக் கடலின் அற்புதன். அவனுக்கு நீ காட்டும் அனைத்தும் ஒன்றுக்குப் பத்தாகச் சிறக்கின்றன! நீ காட்டுவதை அவன் தனக்கென வைத்துக்கொள்ள விரும்பவில்லை. காட்சியிலே கருத்து மலர்கின்றது. கருத்து கவியாக நாவிடை வழிகின்றது. கலையாகக் கையிடை மிளிர்கின்றது. ஒன்றைப் பலவாக்கி உலகுக்கு உதவுகின்றான். உலகம் அதைப் பெறுகின்றது. பெற்றுச் சிறக்கின்றது. உன்பணி இங்கு பலிக்கிறது! சிறக்கின்றது. ஒரு நாளைக்கு அல்ல! ஒரு நாட்டுக்கு அல்ல! ஒரு சாதிக்கு அல்ல! பல நாளைக்கு - பல நாட்டுக்கு - பலருக்கும்! கண்ணே! அவர்தம் அரும்பணியில் உன்செயல் சிறக்க!

இதோ உன் துணைகொண்டு கலை வளர்த்த கவிஞர் பலர் - புலவர் பலர் என்முன் நிற்கின்றனர். அவர்களைக் காட்டுகின்றவனும் நீயன்றோ! கல்லில் கலை காட்டினை! கானலில் நலம் காட்டினை - நெல்லில் உயிர் காட்டினை - நிலத்தில் பலன் காட்டினை. இவை அனைத்தும் நீ தந்த செல்வங்கள் அன்றோ! நீ காட்டக் காணும் உலகம் என்பது எட்டிலன்றோ! பேச்சிலன்றோ! நீ காட்டக் காணும் கவின் வாய்ந்த உலகினை பொய் என்று சொல்வதா! அம்மம்மா! சொன்ன நா வாழுமா?

இன்றைய கவிஞனுக்கு இந்திய நாட்டின் ஏற்றத்தை மட்டும் - பெருங் கலைகளைமட்டும் காட்டவில்லை. இழந்த நிலையையும் காட்டுகின்றாய்! அதோ உயர்ந்த மாளிகையில் உழைக்காது உல்லாச வாழ்வு வாழும் ஒருவனையும் காட்டுகின்றாய். நாளில் பத்து மணி நேரத்திற்கு மேலாக உழைத்து உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் வகையில்லாததோடு, தெரு ஓரத்தில் படுக்க எண்ணும் பரம ஏழையையும் காட்டுகின்றாய்! உன் பணியின் வழி அறிந்த பண்பார் உள்ளங்கள், அவ்வேறுபாடு அகற்ற வழி கோலுகின்றன. உன் பணியறியாப் புண்ணுடை உள்ளங்கள் தம் உடலை - வீட்டை - வினையைப் பெருக்கிக் கொள்ளுகின்றன. இவற்றையும் கவிஞனுக்குக் காட்டுகின்றாய்! கலைஞனுக்குக் காட்டுகின்றாய். நாட்டு நிலையை நீ காட்டக் கண்ட அவன் உள்ளத்தே கனல் மிகுகின்றது! வாக்கில் தீ பறக்கின்றது. கை எழுதுகின்றது. வருகின்றன கவிதைகள் - வெளியாகின்றன கலைகள்! இவை உன் அன்பின் பணி! கண்ணே நீ வாழ்க!

அறிவுறுத்த எழுகின்ற பாடல்கள் - கலைகள் - ஓவியங்கள் இன்று பல தமிழ் நாட்டில் தீட்டப்படுகின்றன. உனது உண்மைப் பணியில் உள்ளம் ஒன்றி ஈடுபட்ட கலைஞர் உள்ளதை உள்ளவாறு உரைக்கின்றனர். பண்ணுடை முகங்கள் - உண்மையை மறைக்கப் பார்க்கின்ற முகங்கள் அறிவை - கலையை - உன் பணியை மறைக்கப் பார்க்கின்றன. உள்ளதை இல்லதாகச் செய்யும் பணியில் பலர் துணை செய்யலாம். சட்டம் உதவும் பணம் உதவும் - பதவி உதவும். ஆனால் உன் பணியே உயர்வடையும்!

கண்மணி! இவற்றையும் நீ கண்டுகொண்டுதான் இருக்கின்றாய்! நீ கதறி அழுகின்றாய்! ஐயோ எனது அருமைப் பணி இப்படியுமா பாழ்படவேண்டும் என்று பகரும் மொழியினை அறிஞர் உள்ளங்கள் அறிகின்றன. கலையினைக்காட்ட நிலையறியா மக்கள் காமுகராகின்றாரே என்று வாடுகின்றாய்! உண்மையைக் காட்டி உழைப்பவரை உயர்த்த எண்ணினால், புண்ணுடையார் புறம்பாகின்றார்களே என எண்ணுகின்றாய்! ஆம்! இது அவர்களுடைய காலம்! 'சுட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்' என்றான் கவிஞன். மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை. அன்று நீ காட்டும் காட்சி அனைத்தும் இன்பக் காட்சியாக இலகும்! எழில் மலரும்! வன்கண்மை இரிந்தோடும். வாட்டம் நீங்கும். உன் உண்மைப் பணி உயரும்! கலை தழைக்கும்! கவி பெருக்கெடுக்கும்! கண்மணி! அந்நாள் அண்மையில் உள்ளது! அதையும் காண்பாய்! அஞ்சற்க!

---



# The Morley Shoe Mart

**CHROME LEATHER WORKS**

Manufacturers of High Class and Stylish Shoes, Slippers, Sandals, Suit Cases and Other Leather Goods

*10, BROADWAY, MADRAS*

சிறு கதை

# சமூகக் கட்டு

போ. குருசாமி

ஜமீன்தார் சாகேப் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டார். ஒரு நாளாவது சிந்தனையில் ஈடுபடாத அவருக்கு அன்றைய அனுபவம் புதிதாக இருந்தது. கையிலிருந்த கடிதம் அவரை மேன்மேலும் சிந்திக்கத் தூண்டியது. கடிதத்தை எழுதிய நங்கையிடம் அவர் கொண்டிருந்த உண்மையான காதல் அச் சிந்தனைக்கு ஓர் எழுச்சியை ஊட்டிற்று. என்னதான் தூண்டுதலும் எழுச்சியும் இருந்தாலும் அனுபவம் புதிதல்லவா? பணம் இருக்கிற இடத்தில் சிந்தனைக்கு என்ன வேலை? பணத்தை வாரி இறைத்தால் பணக்காரனுக்காக அறிவை அடகு வைக்க அறிஞர்கள் காத்திருக்கிறார்கள். எனவே, ஜமீன்தாருக்கு அன்றைய அனுபவம் புதிது; முதன்முதலாக ஏற்படுவது. தன் வாழ்க்கையைப் பற்றித் தானே சிந்திக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. தீவிரமாக எண்ணினார்; மிகத் தீவிரமாக எண்ணினார். மனத்தை ஒருமுகப்படுத்தி எண்ணிவிட முயன்றார்.

*    *    *    *

அவன் தெரு வழியே நடந்து போய்க்கொண்டிருந்தான். எந்த ஊரில் இருக்கிறோம் என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், ஏதோ பழக்கமான ஊர்போலவும் தோற்றுகிறது. தெருவழியே போவோர் வருவோர் எல்லோரையும் வியப்போடு பார்த்தான். 'சுத்தக் கர்நாடகங்கள்' என்று அவர்கள் கோலத்தைப்பற்றி எண்ணினான். ஆனாலும் அந்தக் கர்நாடக உடை தனக்குப் பழக்கமானது போலவும் உணர்ந்தான். மாடமாளிகைகள் நிரம்பியிருந்தன. அவையெல்லாம் ஏதோ ஒரு புதுமையாகத் தென்பட்டாலும் எங்கோ பார்த்திருக்கிறோமே என்று எண்ணினான்.

திடீரென்று ஒரு யானை வருவதைக் கண்டான். அதன்மேல் ஒருவன் அமர்ந்து பறை அறைந்து வந்தான். அவனுக்குப் பின்னால் இருந்த ஒருவன் ஏதோ ஒன்றைக் கையில் வைத்துப் படித்தான். பறை ஓசை கேட்டதும் தெருவில் சென்ற மக்கள் எல்லோரும் நின்றனர். செய்தியைப் படித்தவுடன் அவர்கள் யாவரும் ஒருமுறை தலையை வளைத்து வணக்கம் செலுத்திவிட்டு மேலே சென்றனர். 'இது என்னடா, புதுமாதிரியாக இருக்கிறது! என்னவென்றுதான் கேட்கலாமே' என்று எண்ணி, பக்கத்தில் சென்ற ஒருவரை அணுகினான். "யானைமேலிருந்து என்ன படிக்கிறான்? நீங்களெல்லாரும் ஏன் பணிய வேண்டும்?" என்று கேட்டான்.

" என்ன, ஐயா ஊருக்குப் புதியவர்போலிருக்கிறது. அவர்தான் அரண்மனை வள்ளுவர். இன்னும் இரண்டு நாட்களில் இளவரசருக்குச் 'சின்னப் பட்டம்' சூட்டப் போகிறார்கள். அதைத்தான் அறிவித்தார். அரண்மனை அறிவிப்பைக் கேட்டால் அதற்கு மரியாதை செலுத்த வேண்டாமா? அதற்காகத்தான் தலை வணங்குகிறோம்...... அதுசரி. தாங்கள் யார்?"

" நானும் இந்த ஊர்தான்......"

" என்னமோ !? ப்ம்....ன்" என்று சொல்லிக்கொண்டே வழிப் போக்கர் நடையைக் கட்டினார்.

அவனுக்கு ஒரே வியப்பு. "நம் ஊரில் நடக்கிறவையே நமக்கு விளங்கவில்லையே! சரி, அந்த அரசனையும்தான் பார்த்து விடுவோமே" என்று முடிவுகட்டினான். அரண்மனைக்காக அவன் ஒன்றும் நடந்து அலுக்க நேரவில்லை. திரும்பிப் பார்த்தான், அரண்மனை!

நேரே உள்ளே நுழைந்தான். அவனை யாரும் கவனித்ததாகவே தெரியவில்லை. " நல்ல காவல்; நுழைவதைப் பார்த்தும் தடுக்காமல் இருக்கிறார்களே!" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே உள்ளே போனான். அப்போதுகூட அவனை யாரும் தடுக்கவில்லை. அவனுக்கு ஒரே வியப்பு! 'இப்படியும் இருப்பார்களா" என்று ஒரு கேள்வி எழுந்தது. "ஒருவேளை உள்ளே! ஏதாவது ஆபத்து ஏற்படலாம். அதனால்தான் இவர்கள் தடுக்கவில்லை போலிருக்கிறது" என்ற எண்ணம் உதித்தது. அதன் விளைவாக அச்சம் அவனைக் கௌவிக் கொண்டது. இருந்தாலும் மறைந்து மறைந்து மெல்ல மெல்ல உள்ளே போனான். ஊர்ந்து போகிறோமா நடக்கிறோமா என்று தெரியாமல் உள்ளே போனான். உள்ளே என்றால் நேரே அந்தப்புரத்துக்கே போய்விட்டான். அது வரையிலும் ஒரு தடையும் நேரவில்லை என்ற ஒரு காரணமே அவனுக்கு எல்லையில்லாத வெருட்சி அளித்தது. கடைசியாக ஒரு பரண்மேல் அமர்ந்து கொண்டான். எப்படித்தான் பரண்மேல் ஏறினான் என்று அவனுக்கே தெரியவில்லை. மேலும், பரணிலே அவனுக்கு உதவியாக மெத்தை தலையணையெல்லாம் யார் போட்டார்கள்?......ஒன்றும் புரியவில்லை.

இருந்தாற் போலிருந்து வீணை இசை அவனை ஈர்த்தது. குனிந்து பார்த்தான். அந்தணர் ஒருவர் வீணையை மீட்டினார். அழகாக மீட்டிப் பாடினார். அவனுக்குத் தூக்கம்கூட வந்தது. அவ்வளவு இனிமையாக இருந்தது, வீணை இசை. தூக்கத்தை அடக்கிக்கொண்டு, என்னதான் நடக்கிறது என்று கவனித்தான். அந்த இசைக் கலைஞருக்கு எதிரே அசையும் சதைப் பிண்டமாக ஓர் உருவம் இருந்தது. அந்த உருவத்துக்கு நடந்த மரியாதையிலிருந்து அது அரசியின் திருவுருவம் என்று முடிவு செய்தான். இசைக் கச்சேரி நடந்தபோது மன்னன் வந்து

சேர்ந்தான். அவனுடைய வருகையை அரசி விரும்பவில்லை. தன் வெறுப்பை வெளியே காட்ட அவள் தயங்கவில்லை. எரிந்து விழுந்தாள்; வாய் வழியாக நெருப்பைக் கக்கினாள். பரண்மேல் இருந்தவனுக்கு இதில்மட்டும் வியப்பே தோன்றவில்லை. தனக்கு மிகவும் அனுபவமான நிகழ்ச்சி போலவே அவனுக்குப் பட்டது. உள்ளே வந்த மன்னனுக்கும் நடந்த நிகழ்ச்சி வெறுப்பையோ வியப்பையோ ஊட்டவில்லை. பொறுமையாக நின்று பார்த்தான். அரசியின் வடிவிலிருந்த ஆங்காரியின் ஆத்திரம் வடிவதாகக் காணோம். "சரி, இது வழக்கம்தானே" என்று சொல்லுவதுபோல ஒரு வகையான விகற்பமும் இல்லாமல் வந்த வழியே திரும்பினான். பரணில் இருந்தவனுக்கு ஒரே மகிழ்ச்சி! என்னவோ தெரியவில்லை. உடனே பொத்தென்று கீழே குதித்தான். ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை. மன்னனைப் பின்தொடர்ந்தே சென்றான்.

மன்னன் அரண்மனையைவிட்டு வெளியேறினான். அவனும் கூடவே பின்தொடர்ந்தான். திடீரென்று ஒரு பெரிய மாளிகைக்குள் மன்னன் நுழைந்தான். அவனும் உள்ளே போனான். மன்னனைப் பல பெண்டிர் வணங்கி வரவேற்றார்கள். அவனைமட்டும் யாரும் கவனித்ததாகவே தெரியவில்லை. இந்த மாளிகை திடீரென்று எப்படி வந்தது? இந்தப் பெண்களெல்லாம் யார்?--இப்படியாகப் பல கேள்விகள் அவன் மனத்தில் எழுந்தன. ஆனால், விடை தெரியவில்லை. அதற்குள், அதோ, யாரது? அவளை எங்கோ அவன் பார்த்திருக்கிறானே! யாரது? யார்? ம்ம்......யாரது?

மன்னனை நெருங்கினாள். கரங்களோடு கரங்கள் சேர்த்து வரவேற்றாள். உள்ளே அழைத்துச் சென்றாள். அவன் உள்ளே போக விரும்பவில்லை. வெளியே நின்றுவிட்டான். பேச்சுக் குரல் கேட்டது. கேட்டான்.

"மகாராஜா! ஒரு கேள்வி கேட்கலாமா?"

"உனக்கு இல்லாத உரிமையா? தயக்கம் எதற்கு?"

"இல்லை, ஒன்றுமில்லை......சும்மாதான்"

"போடி பைத்தியமே! சும்மாவாவது சுமந்துகொண்டாவது! என்ன வேணுமோ கேள்,"

"இளவரசுப் பட்டம் சூட்ட நாள் முடிவாயிற்று என்று கேள்விப் பட்டேன்.......அதுதான், வேறொன்றும் இல்லை......"

"என்னமோ இழுக்கிறாயே. மனத்தில் உள்ளதைச் சொல்லு. மறைப்பு எதற்கு? என்னிடத்தில் எதற்காக மறைக்கவேண்டும்? ஏன், நீயும் விழாவுக்கு வரவேண்டுமா?......."

"ஐயையோ! நானாவது அரண்மனைக்கு வருவதாவது! எங்களுக்கெல்லாம் அங்கே இடமேது? அப்படி நான் ஒன்றும்......."

"பின்னே என்னதான் கேட்க நினைக்கிறாய்? கேட்டுத் தொலையேன். அர்த்தமற்ற விளையாட்டுக்காகவா இங்கே நான் வருகிறேன்?"

“ கோபமே வந்து விடும்போலிருக்கிறதே! இப்போதே இவ்வளவு கோபமென்றால் நான் நினைத்த கேள்வியைக் கேட்டுவிட்டால்......”

“ இதோ பார்....அப்படியெல்லாம் நான் ஒன்றும் முட்டாளல்ல. சும்மா கேள் ”

“ சரி கேட்கிறேன். என்ன ஆனாலும் சரி.......உங்கள் இளவரசன் இருக்கிறானே, இன்பவேலன், அவன் பிறப்பைப்பற்றி என்னென்னவோ பேசிக்கொள்கிறார்களே, அதெல்லாம் மகாராஜா சமூகத்துக்குத் தெரியுமோ?......

“ தெரியுமோ என்ன? எனக்கும்தான் அந்தச் சந்தேகம் உண்டு. நான் என்ன பண்ணலாம்? எல்லாம் நாம் நினைத்தபடியா நடக்கிறது? உன் மகன்...—”

வெளியே இருந்த அவனால் அவ்வளவுதான் கேட்க முடிந்தது. பிறகு ஒன்றும் கேட்கவில்லை. தூக்க மயக்கம்.

விழித்துக்கொண்டபோது மன்னன் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அரசன் வாசலைத் தாண்டிய பிறகு அவனும் அடித்துப் புரண்டு எழுந்து ஓடினான். அவன் வெளியே போகுமுன் ஒரு பணிப்பெண் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். “பாவம், பயித்தியக்காரி! என்னை அரசன் என்று நினைத்துத்தான் கொடுத்துவிட்டாள். என்ன எழுதியிருக்கிறது பார்க்கலாம்” என்று கடிதத்தைப் பிரித்தான். படித்துக்கொண்டே நடந்தான். அதற்குள் வாயிற்படி தடுக்கிற்று. விழுந்துவிட்டான்......

* * * *

ஜமீன்தார் சாஹேப் விழித்துக்கொண்டார். சிந்திக்கத் தொடங்கினார், பாவம்; தூங்கிவிட்டார். கையிலே ஒரு கடிதம் இருந்தது. அதைப் படித்தார்:

ஜமீன்தார் சாசேப்!

திருவடிகளுக்கு வணக்கம். உயில் எழுதப் போவதாகக் கேள்விப்பட்டேன். இதுவரை இல்லாத உரிமை எனக்கு இனிமேல் புதிதாக வரப்போவதில்லை. இதுவரை இருந்த உரிமையை இனிமேல் என்னிடம் பறிப்பாரும் இல்லை......என்னவோ எழுதத் தோன்றுகிறது. எழுதுகிறேன். மன்னிக்கவேண்டும்.

என்னதான் காதலுக்கு உறைவிடமாய் இருந்தாலும் வைப்பாட்டிதான். என் வயிற்றில் உதித்த குழந்தைக்கு உரிமை அளிக்கச் சமூகச் சட்டம் மறுக்கிறது.

மனைவியிடம் அன்பில்லாமல் இருக்கலாம். மனைவி என்ற ஒரு காரணத்தினாலேயே அவள் பெற்றெடுத்த குழந்தைக்கு உரிமை கிட்டுகிறது.

என் வயிற்றில் தோன்றிய கரு தங்கள் விளைவாய் இருந்தாலும் "வேசி மகன்" என்றுதான் முடிகிறது.

அவள் குழந்தையோ தோற்றம் எப்படியிருந்தாலும் 'ஜமீன்தார் பையன்' என்றுதான் முடிவாகிறது.

கணிகையின் குழந்தை உள்ளன்பின் விளைவு; ஊனமில் பிறவி. ஆனால், உரிமை இல்லை.

மனைவியின் குழந்தை மனை வாழ்க்கையின் விளைவு; மனக்குறைவின் புறத்தோற்றம். ஆனால், உரிமை பெற்றுவிடுகிறது.

என்ன செய்யலாம்? என் காதலருக்கு ஆண்மை இல்லை. அவள் கணவருக்கு உரிமை இல்லை. சமூகக்கட்டு நாசமாகும் காலம் எப்போதோ, தெரியவில்லை,

தாய்மையால் வருந்தும் அடியாள்
காமவல்லி

கடிதத்தைப் படித்தார். சிந்திக்க முயன்றார். பாவம்! அந்தப் பணக்காரப் பிறவிக்குச் சிந்தனை என்ற ஒரு சரக்கு ஏது?

---


# உங்களுக்கு எது தேவை?

| | |
|---|---|
| மேக்ஸ்வெல் | ஆயில் எக்ஸ்பெல்லர் |
| ,, | ரோட்டரி ஆயில் மில் |
| ,, | பின்டோ ஆயில் மில் |
| ,, | மாவு மில் |
| மாக்ஸ்வெல் | கரும்பாலைகள் |
| ,, | டிகார்டிகேட்டர் (கல்யாஸ்டைப்) |
| | ரைஸ் ஹல்லர்கள் |
| | சீயக்காய்மிஷன் |
| | தண்ணீர் பம்ப்கள். |
| | எலக்ட்டிரிக்மோட்டார் பம்ப் வகையறுக்கள் |

ஹேர், காட்டன், ரப்பர் பெல்டுகள், ரிங் ஆயிலர் பேரிங்குகள், அஸ்பஸ்டா முதலிய சகல மிஷன்களுக்கும் ஸ்பேர் சாமான்கள் முதலியன கிடைக்குமிடம்:

போன்: 3472 தந்தி: "நவஸ்டார்"

**மதராஸ் மில் ஸ்டோர்ஸ்**

302, லிங்கி செட்டி தெரு, P. B. 174

ஜி. டி. மதராஸ் - 1

# மீண்டும் போருக்கா!

போர் நின்று ஆண்டுகள் இரண்டு ஆகின்றன. உலகை உயர்வுடையதாக்க வேண்டும் என்று விரும்புகின்றனர் பல்லோர்! நாடு தோறும் மாநாடுகள் கூட்டங்கள் பல நடைபெறுகின்றன. வல்லரசுகளெல்லாம் பற்பல இடங்களில் கூடிப்பேசுகின்றன. பேச்சுக்கள் வெற்றி பெற்றனவா என்று மட்டும் கேட்கவேண்டாம். வெளிக்கு வார்த்தைகள் வளமாக வருகின்றனவே ஒழிய உள்ளத்துள் ஒன்றற்கொன்று ஒத்து நடைபெறவில்லை என்பது திட்டமாகத் தெரிகின்றது. சமாதானத்தின் பேராலேயே மற்றொரு சண்டைக்கு வழிகோலுகின்றன வல்லரசுகள். அவற்றுள் முன்நிற்பது அமரிக்கா!

அமரிக்க ஐக்கிய நாடுகளின் தூதுவர் உலகில் பல பாகங்களிலும் ஓடி உழல்கின்றனர். உலக சமாதானத்தை நிலைநாட்ட அவர்கள் ஓடி உழைப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் மற்றொரு போருக்கு மறைமுகமாக விதை தூவுகின்றனர். ஒருபுறம் அமரிக்கா, மற்றொரு புறம் ரஷ்யா இரண்டும் கருத்தில் வேறு பட்டதோடு செயலிலும் வேறு படத்தொடங்கி விட்டன. தாழ்ந்த நாட்டைத் தலைதூக்கப் பரிந்து பேசி அமரிக்கா முன் வருகிறது. வருகின்றதன் பயன் அவ்வநாட்டில் நலிவு ஏற்படுகின்றதே ஒழிய நன்மை பயப்பதில்லை.

சீன நாட்டில் அமரிக்கா கால்வைக்காதிருந்தால் சீனாவின் நிலையே வேறு வகையாக இருந்திருக்கும். ரஷ்ய ஆதிக்கம் ஓங்குமே என்ற அச்சத்தால் சீனாவுக்கு வலியவந்து உதவிபுரிய அமரிக்கா முன்னின்றது. அதனால் சீனா நித்திய போர்க்களமாயிற்று. உலகப் போர் ஒழிந்தாலும் சீனாவின் உள்நாட்டுப் போர் ஒழியவில்லை. காரணம் அமரிக்கா என்று அரசியல் அறிந்தோர் அலசுகின்றனர்.

கிரீசின் பொருளாதாரத்தில் பரிவுகாட்டி உழைப்பதாக அமரிக்கா முன்வந்துள்ளது. பால்கன் நாடுகளில் ரஷ்யாவின் கைபலம் ஓங்காதிருக்கக்கண்ட வழி அது என்பது அனைவரும் அறிந்ததே! அமரிக்கா நுழைவின் பலன் கிரீசில் பெரும் குழப்பம். போர் முடிந்தநிலையில் கிரீசில் கூட்டாட்சி ஏற்பட்டு மக்கள்நிலை உயர வழிகாண முடிந்தது. ஆனால் ஆங்கில அமரிக்கா கூட்டுறவினால் - கலப்பினால் - சாதாரண மக்கள் - உழைப்பாளிகள்-வயலுழவர்கள்-இடது சாரிகள் நாட்டை விட்டு வடக்கிருக்கும் காடுகளில் சார்ந்து உள்நாட்டுப் போர் நடத்த ஏதுவாயிற்று. இன்றைய அரசாங்கத்திற்கு அமரிக்காவிலிருந்து உதவி வருகின்றது. ஆனால் கிரீக் அரசாங்கமோ ஏழைகளை நசுக்கும் அரசாங்கமாக இருக்கிறது. பொதுமக்கள் ஏழை எளியவர்களின் நலங்கள் கவனிக்கப்படா வகையிலேயே இன்று அந்த அரசியல் அமைந்துள்ளது. இந்த நிலையில் கடந்த இரண்டாண்டுகளில் அமரிக்காவும் பிரிட்டனும் அந்நாட்டு

அரசாங்கத்துக்கு உதவி அவர்களை அல்லலுறச் செய்தன. அவர் தம் உதவி எல்லாம் கிரீசை இரண்டாக்க - துன்பமுறச் செய்ய உதவுகின்றன. ஆனால் அமரிக்கா ரஷ்யாவுக்கு எதிராகத் தமக்குத் துணையாக ஒரு நாட்டைக் கொண்டதாக எண்ணலாம். அவ்வெண்ணம் மற்றொரு போர் என்ற வகையில் முகிழ்த்தது.

அமரிக்கா இந்தியாவையும் விடவில்லை. அமரிக்க அலுவலாக கிரேடி அவர்கள் இந்தியாவை வாழவைப்பாராகினர். இந்திய நாட்டுக்கு வேண்டிய தேவையும், அதற்கு அமரிக்கா செய்யவேண்டிய உதவியையும் அறிவது அவர் பணி. இந்தியாவின் மேல் என்றும் இல்லாத பட்சம், பரிவு அனைத்தும் அமரிக்காவுக்கு இன்று உண்டாகி விட்டது. உரிமை இழந்து ஓலமிட்ட நாளெல்லாம் செம்மாந்திருந்த அந்நாட்டுக்கு இன்று உரிமை இந்தியாவுக்கு உழைக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. அமரிக்கா நம் நாட்டை நலமுறச் செய்ய வருவதாகக் கூறிக்கொண்டே, முதலாளிகளின் கூட்டுறவைப்பெற்று நாட்டில் உள்ள ஏழை எளியவர்களை எல்லாம் வாட்டும்வகையில் கூட்டுவாணிபத்தால் சுரண்டி இந்நாட்டை முதலாளிப் பண்ணையாக்க எண்ணங் கொண்டுள்ளது என்பது தெளிவு. கைத்தொழிலால் பிறநாட்டை வாழ வைக்கும் பரந்த மனப்பான்மை தன் நாட்டில் இருக்கிறதா? இல்லையே! இருந்தால் அங்கு நாளுக்கொரு வேலை நிறுத்தம் நேருமா? அதைத் தடுக்க அவசர சட்டங்கள் முளைக்குமா? வேலையில்லாத் திண்டாட்டம் மிகுமா?

இந்தியாவை - இந்திய முதலாளிகளின் உறவால் தனக்குப் பொருளாதாரத்தில் - வியாபாரத்தில் அடிமையாக்கும் எண்ணமன்றி அதற்கு வேறு என்ன நல்லெண்ணம் இருக்கக்கூடும்? அதுவும் இன்று இருபெரு நாடுகளாகப் பிரியும் இந்நாட்டில் அமரிக்க ஆதிக்கம் அல்லலையும் அவதியையும் தேடித் தருவதோடு உள்நாட்டுச் சண்டைகட்கும் உடந்தையாகுமே! இவ்வுபகண்டத்து அரசியல் வல்லுநர் அமரிக்காவின் வார்த்தைக்கு ஏமாறுதிருப்பார்களானால் சீனாவின் குழப்பம் - கிரீசின் அவதி ஆகியவற்றை இந்த நாட்டில் இல்லையாகச் செய்யலாம்.

அனைத்துக்கும் மேலாக பாரிசில் நடந்த ஐரோப்பிய நாடுகளின் கூட்டம் மற்றொரு போருக்குத் திட்டமாக விதைதூவி விட்டது. முக்கூட்டு மாநாடு முறியக்காரணம் என்ன? ரஷ்யாவும் அமரிக்காவும் கருத்து மாறுபடக் காரணம் என்ன? அனைத்தையும் அலசிப் பார்த்து மறுபடியும் ஒருவர்க்கொருவர் காழ்ப்பு வேறுபாடு காணாத வகையில் ஒன்றுபட்டு உழைப்பதன்றோ ஆண்மை! அறிவுடைமை! கருத்துவேறுபாட்டைக் காரணமாகக் கொண்டு, ரஷ்யாவுக்கு மாறுபட்ட ஐரோப்பிய நாடுகளையெல்லாம் இவ்வளவு விரைவில் ஒன்றாக்கி - ஐரோப்பாவை உயர்த்துவதாகக் கூறி அவற்றைப் படுபாதாளத்தில் தள்ளும் மற்றொரு போருக்கு வழிகோலுவதா முறை? பாரிஸ் நிகழ்ச்சி பயங்கர நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை!

ஐரோப்பிய நாட்டுப் பொருளாதார முன்னேற்றங் கருதியே பாரிசில் கூட்டம் நடைபெற்றது என்ற அறிக்கைகள் கண்டோம். பல் வேறு வகையிலே உட்கழகங்களும் அமைக்கப்பட்டன. பொருளாதார முன்னேற்றத்திற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கலந்து கொள்ளாததற்கும் மூலகாரணம் யாது? அமரிக்காவின் அளவு மீறிய தலையீடுதான் என்பர் அரசியல் அறிஞர். போர்முகத்தில் பொர ஆள் சேகரிக்கும் அரும்பணியில் இன்று அமரிக்கா தலையிடுகிறதென்றே தயக்கமின்றி கூறலாம். ஐரோப்பிய நாட்டைப் பொன் கொழிக்கும் நாடாகச்செய்ய வலிந்து முன்வரும் அமரிக்கா முதலில் நாட்டில் வருந்தி வாடுபவருக்கு வழிதேடட்டும். வேலை நிறுத்தங்களை இல்லையாகச் செய்யட்டும். கடுஞ் சட்டங்களெல்லாம் கால்மாறிப் போகட்டும்! அந்தநாள் வருமா?

சைனாவில் அல்லல்; கிரீசில் அவதி; ஐரோப்பிய நாடுகளுக்குள் பிளவு. இவ்வளவையும் செய்துவிட்டு இன்பமுற்றிருக்கலாம் என்று அமரிக்கா எண்ணுமாயின் அது வீண் கனவு. மற்றொரு போருக்கு வலிய வழிகோலுவதாக முடியும் அது. போருக்கு வழிகோலிய நாடுகள் இன்று புதைந்தன என்பதைக் கண்டும் மற்றொரு போருக்கு அமரிக்கா வழிகோலுமானால், அதற்குப் பிரிட்டனும் பிரான்சும் பெருந் துணை செய்யுமானால் அவர்தம் முறையை - வழியை - என்னென்பது. பிரான்சு நாட்டு விடுதலை நாளில் ஆங்கில அமைச்சர் பெவின் பேசிய பேச்சு, போர்வித்துக்களை மேலும் நன்றாகத் தூவி, முக்கூட்டு உடன் படிக்கை உண்டு என்பதை வலியுறுத்தி விட்டது. போருக்கு வழி கோலி அடியோடு வீழ்ந்த முன்னைய மூன்று நாடுகளின் (ஜர்மனி, இத்தாலி, ஜப்பான்) வரலாறு இவர்கட்கு ஓர் எச்சரிக்கை - எடுத்துக்காட்டு. இந்த எச்சரிக்கையையும் மீறி மறைமுகமாக மற்றொரு போருக்கு இப் புது முக்கூட்டாளர் முயல்வார்களானால், முடிவில் அவர்கள் நாட்டுக்கு மட்டுமல்ல அல்ல, அனைத்து நாடுகளுக்கும்-உலக முழுவதுக்கும் கேடு-கெடுதி - எல்லாம். ஆகவே, உலகம் வாழவேண்டுமானால் இந்த முறைகள் மாறவேண்டும் - அனைவரையும் ஒன்று கூட்டி ஆவன செய்ய வேண்டும். ஒற்றுமைக்கு மாறாயிருக்கின்ற கருத்துக்களை ஆராய வேண்டும். அந்த ஒற்றுமையின் அடிப்படையிலே உலக சமாதானம் கால்கொள்ளும்; போர்ப்பயம் நீங்கும்; புவி தழைக்கும்!

---

ஏஜண்டுகளுக்கு:—அடுத்த இதழில் வேண்டிய பிரதிகளின் தேவையை 20-8-'47க்குள் தெரிவித்தால்தான் அனுப்ப முடியும். இன்றேல் இப்போதைப் போலவே அனுப்பப் பெறும்.

மானேஜர்.

# மதிப்புரை

**கி. பி. 2000** :—(ஆசிரியர் : மு. வரதராசனார், விலை 1-12-0. தமிழர் பதிப்பகம், லிங்க செட்டித் தெரு, சென்னை - 1.)

ஆசிரியரைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தத் தேவை இல்லை. தான் காண விரும்பும் உலகினைக் கனவிடைக் கண்டு களிக்கின்றார் ஆசிரியர். கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போகும் காலம் கி. பி. 2000 என்று காட்டுகின்றார். உலகில் காணும் அல்லலையும் அவதியையும் எண்ணி எண்ணி அவை நீங்கிய உலகமும் அங்குள்ள அரசியலும் எப்படி இருக்கும் என்று ஆசிரியர் காட்டிய கற்பனை உலகில் - கனவு உலகில் நாம் நம்மை மறப்போம். அவர் காணும் கி. பி. 2000த்தின் உலகம் இன்னும் விரைந்து வரினும் வரவேற்கத் தக்கதே!

**தமிழ் நெஞ்சம்** :—(ஆசிரியர் : மு. வரதராசனார், விலை 2-4-0, பாரி நிலையம், சென்னை)

தமிழர்தம் பேச்சுக்களை மேடைகளில் கேட்டுக் கேட்டுச் சலிப்படைந்த உள்ளத்திற்குத் 'தமிழ் நெஞ்சம்' ஆறுதல் தருகின்றது. தமிழ் இலக்கியமே தமிழ் நாட்டை உலகுக்குக் காட்டுகின்றது. இலக்கியம் கண்ட புலவர் உள்ளமே தமிழ் உள்ளமாக விளங்குகின்றது. அத்தகைய சான்றோரே நாட்டுக்கு அணி என்ற தமிழ் நெஞ்சை விளக்குவதற்காகவே 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே' என்ற அடியுடன் நூல் தொடங்குகின்றது. அவ்வான்றோர்நெஞ்சை விளக்கும் பாக்கள் பல நல் விளக்கங்களோடு காட்டப்பட்டுள்ளன. இந்நூல் தமிழர் என்றும் போற்றவேண்டிய ஒன்று!

**கீதத் தமிழ்** :—(ஆசிரியர் : K. M. பாலசுப்பிரமணியம், விலை ரூ. 3, முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை)

தமிழ் இசைக்குப் போதிய பாடல்கள் இல்லை என்று பேசிய காலம் மலையேறிவிட்டது. புத்தம்புது நூல்கள் - தமிழ்இசை பற்றிய கீதங்கள் வெளிவருகின்றன. இந்நூலாசிரியர் பல கீதங்களை பல இராக தாளங்களில் ஆக்கித் தமிழ்நாட்டுக்கு அளித்துள்ளார். இவைகளுக்குச் 'சுரம்' அமைத்து வெளியிட்டிருப்பின் மிகுந்த பயன் உண்டாகும். ஆசிரியர் தம் முகவுரையில் குறித்தபடி 'சுரத்'துடன் அடுத்த பதிப்பை வெளியிடுவார் என எண்ணுகின்றோம். பல்வேறு வகைகளிலே - பல்வேறு துறைகளிலே பாடல்களை அமைத்து அவ்வவற்றின் பாகுபாட்டின்படி வெளியிட்டிருக்கின்றார். பல்வேறு பாடல்களோடு இயற்கைப் பொருள்களாகிய ஞாயிறு, கடல், தாமரை முதலியவற்றையும் பண்ணிடைப் பாராட்டி இருப்பது விரும்பத்தக்கதே! இசைவாணர்கள் இந்நூலை ஏற்று இன்புறுவார் என எண்ணுகின்றோம்.

---

குறிப்பு :—மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

---

Printed by V. Raj[illegible] at Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Published by [illegible] Ramasami, 34, Vaithiyanatha Mudali Street, Chetpet, Madras. Editor : A. M. Paramasivanandam.

# எல்லாப் புத்தகங்களுக்கும்

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம் :: திருச்சி



# ஆர்யன்

## டூத் ப்ரஷ்

சென்னை ஸ்டாக்கிலிருந்து சப்ளைகள் இப்போது கிடைக்கும். இந்த ராஜதானியின் எந்த ஸ்டேஷனுக்கும் டஜன் அண்டு க்ரோஸ் லாட்களில் இலவச டெலிவரி செய்யப்படும்.

விலை முதலான விவரங்களுக்கு எழுதவும்

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

ராஜதானி ஏஜண்டுகள் :

ஜெனரல் ஸ்வதேசிஸ் லிமிடெட்.,

எஸ்பிளனேட், மதராஸ்.

PALAYAKAT COY., LTD.
MADRAS. MADRAS.

TRADE MARK

கல்யாண காலத்திற்காக
ஸ்பெஷலாய்த் தருவித்திருக்கும்

# பெங்களூர் - பெனரஸ் - காஞ்சீபுரம்

# பட்டுச் சேலைகளை

செலக்ஷன் செய்வதற்கு முந்துங்கள்:

அழகான பார்டர்கள்! புதுமாதிரியான கலர்கள்!!

"சங்கு மார்க்கு"

கைலிகள், கர்ச்சிப்புகள் உழைப்புக்கும்
உறுதிக்கும் உத்தரவாதமானவை

# பீதாம்பர மாளிகை

தி மதராஸ் பளயக்காட் கம்பெனி லிமிடெட்
3-4, அம்மன் சன்னதி, மதுரை
தலைமை ஆபீஸ்: 31, அரண்மனைக்காரன் தெரு, மதராஸ்.

Wrapper only—Shakti Press Ltd., Madras 14.